விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalal.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 07 செவ்வாய்க்கிழமை (23.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

## முதலீட்டாளர் சம்மேளனம் ஊடாக முன்னாள் போராளிகளுக்கு தொழில்

### வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்கிறார் கூரே



(யாழ்ப்பாணம்)

முன்னாள் போராளிகள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முதலீட்டாளர் சம்மேளனம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கும் என வடமாகாண ஆளுநர் றெயினோல்ட் கூரே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலீட்டாளர்கள் சம்மேளனத்தின் தொடக்க அமர்வு நேற்றைய

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் மீது சிங்கள மாணவர்கள் தாக்குதல்!







23ஆம் பக்கம் பார்க்க....


# மிரட்டல்களால் என்னை பணிய வைக்க முடியாது!

## மைத்திரிக்கு மகிந்த பதில்



# பணிய வைக்க முடியாது!

## மைத்திரிக்கு மகிந்த பதில்



(பத்தரமுல்லை)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிற்கு நேர்ந்த கதியே தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் நேரும் என எச்சரித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெறும் மிரட்டல்களை விடுப்பதன் மூலம் புதிய கட்சி உருவாகுவதை எவராலும் தடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### புதிய அமைப்பாளர்கள் சு.கட்சியில் நியமனம்



(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளராக நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் 23ஆம் பக்கம் பார்க்க....

### நாமல் ராஜபக்ஷ பிணையில் விடுதலை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின்புதல்வரும்நாடாளு மன்ற உறுப் 24ஆம் பக்கம் பார்க்க....

## எஜமானின் உயிரைக்காக்க தன்னுயிரை மாய்த்த நாய்



23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு பொருளாதாரத்தின் சாதக பாதக நிலைமைகள்

### மத்திய வங்கி ஆளுநர் விளக்கம்



(டில்லி)

தென்னிந்திய மாநிலங்களுடன் முதலீட்டு தொடர்புகளை அதிகரிப்பது வடமாகாணத்துக்கு பொருளாதார ரீதியில் நன்மையை பெற்றுக்கொடுக்கும் என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலீட்டாளர்கள் சம்மேளனத் 24ஆம் பக்கம் பார்க்க....

## தனியார் பேருந்து தடம்புரள்வு

### பெண் பலி ; 24 பேர் காயம்




(யாழ்ப்பாணம்)

மடுவில் இருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணம் செய்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் இருபத்தி நான்கு பேர் வரையில் காயமடைந்துள்ளனர். 24ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்


வணிக கல்வியும் கணக்கீடும் II



உள்ளே...

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 30 . 12 . 1952

மறைவு 24 . 07 . 2016

### அமரர் கந்தையா சச்சிதானந்த சிவராசா (சச்சி)

(ஓய்வுநிலைப் பணியாளர் இலங்கை மின்சாரசபை)

கடந்த 24.07.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.08.2016) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்று அன்று நண்பகல் அன்னாரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுவதுடன் அன்னாரது இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பரமேஸ்வரி அம்பாள் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

- குடும்பத்தினர்

(சி-5522)


## விற்பனைக்கு

சிவப்பு Honda CD-200
Motor bike, 85-xxxx,
Japan original parts

தொ.பே: 077 219 8227

(சி-5524)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## நன்றி நவில்கின்றோம்

### திரு.கந்தையா அருந்தவபாலன்

திருவாளர் கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழா சென்ற 17/08/2016 புதன்கிழமை இனிதே நடந்தேறியுள்ளது. இவ்விழாவிற்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள், பாராட்டுரைகள் வழங்கிய பெரியோர்கட்கும் **அருந்தவம்** மணிவிழா மலருக்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், கட்டுரைகள் வழங்கிய சான்றோர்கட்கும் இவ்விழா இனிதே நடைபெற பங்களிப்புச் செய்தோர்க்கும் வருகை தந்து சிறப்பித்த அன்பர்கள், நண்பர்கள், மாணவர்கள் மற்றும் **அருந்தவபாலன் அறக்கட்டளை நிதியம்** செழிப்புற நிதி வழங்கியோர்க்கும் மணிவிழா நாயகன் சார்பாகவும் விழாக்குழு சார்பாகவும் நன்றிகள் தெரிவித்து சிரம்தாழ்த்தி நிற்கின்றோம்.

நன்றி: விழாக்குழு சார்பாக

| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
|---|---|---|
| திரு.க.கனகேஸ்வரன் | திரு.க.நடேஸ்வரன் | திரு.கா.சிவஞானசுந்தரம் |
| பிரதேசசெயலர், | அதிபர் | முகாமையாளர் |
| மருதங்கேணி. | | திருக்கணித பதிப்பகம் |

(சி-5523)

உ
சிவமயம்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அராலியூர் அமரர் கனகசபை கணேசமூர்த்தி (சின்னத்தம்பி)



தோற்றம் : 30.09.1953 – மறைவு : 25.07.2016

நீர் ஊத்தி விளை நிலத்தில் நெற்குவியல் கண்டவன்
சீர்பூத்த திருமுறைகள் புராணங்கள் ஓதவல்லோன்
கார்காத்த சைவ வேளாளன் கண்ணியமிகு தர்மசீலன் குலப்
பேர் காத்த பெருமையினோன் கனகசபை கணேசமூர்த்தி

புன்சிரிப்பும் இன்சொல்லும் கொண்டு அனைவரையும் கவர்ந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் கனகசபை கணேசமூர்த்தி அவர்கள் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது வைத்திய உதவிகள் புரிந்த வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களுக்கும் அன்னார் சிவபதமடைந்ததும் எமக்குப் பல வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் அன்னாரது இறுதிக் கிரியைகளின் போது கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் மலர் வளையங்கள் வைத்தும், கண்ணீர் பதாகைகள் (பனர்) வெளியிட்டும் அஞ்சலிகள் செய்த அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா குடும்பத்தினர், பிரதம சிவாச்சாரியர் குடும்பத்தினர், திருப்பணிச் சபையினர், அன்னதான சபையினர், முதலியோர்களுக்கும், தொடர்ந்து யாழ்/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினருக்கும், தொடர்ந்து முல்/ மாங்குளம் மத்திய மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினருக்கும் மற்றும் வட்டுக்கோட்டை தபால் நிலைய தபால் அதிபர், உபதபால் அதிபர்கள், உத்தியோகத்தர்களுக்கும், யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி தமிழ் அணி VI மாணவர் சமூகத்தினருக்கும்,

மற்றும் அராலி தெற்கு சைவத்தமிழ் இளைஞர் மன்ற அன்பு நண்பர்களுக்கும், அராலி தெற்கு இந்துமா மன்ற அன்பு நண்பர்களுக்கும், அராலி மாதாங்கோவிலடி அன்பு இளைஞர்களுக்கும் மற்றும் எமது அன்புக்குரிய அயலூர் நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தொலைநகல், தந்தி முதலியன மூலம் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்ட உள்ளூர், வெளியூர் நண்பர்களுக்கும் மற்றும் அன்னாரது இறுதிக் கிரியைகளை நடத்திய கரணவாய் சிவஸ்ரீ கனகசபைக் குருக்களுக்கும் மற்றும் பூமாலைகளைத் தந்துதவிய அளவெட்டி பாலா அண்ணை அவர்களுக்கும் மற்றும் அஞ்சலி உரைகள் ஆற்றிய அன்புக்கும் மதிப்புக்குரிய பெரியார்களுக்கும் மற்றும் எல்லாவற்றுக்கும் எம்மோடு ஒத்துழைத்த அத்தனை அன்பு நண்பர்களுக்கும், இன்றைய தினம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் கரம் கூப்பி உள்நெகும் எம் அன்பை நன்றிகளாகக்கூறி எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

.:நன்றி:.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க; இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

"பண்டிதமணி வாசா"
அகாயக்குளம் பிள்ளையார் கோவிலடி, அராலி தெற்கு.
தொ.பே : 077 154 7579, 077 720 4331

க.தவமணி - மனைவி,
க.மங்களமூர்த்தி (தமிழ் ஆசிரியர்)
க.வாகீசன் (உபதபால் அதிபர்) } பிள்ளைகள்

(5690)

# மகிந்த ராஜபக்ஷ புதிய கட்சி அமைக்கும் சாத்தியமில்லை

## இந்திய ஊடகம் செய்தி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய கட்சியொன்றை அமைக்கும் சாத்தியமில்லை என இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.


மகிந்தவிற்கு ஆதரவாக செயற்பட்டு வந்த 40 பேர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட போதிலும், மகிந்த ராஜபக்ஷ புதிய கட்சியொன்றை அமைக்கக்கூடிய சாத்தியங்கள் குறைவாகவே காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே இருந்து கொண்டு முழு அளவில்ஆட்சியை கைப்பற்றவே மகிந்த முயற்சிக்கின்றார்.

புதிதாக கட்சி அமைத்து வெற்றியீட்டுவது என்பது சாத்தியமற்றது என்பதனை மகிந்த நன்கு அனுபவத்தின் மூலம் அறிந்து கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேணி வரும் தொடர்புகள் சுதந்திரக் கட்சியினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் சுதந்திரக் கட்சி தோல்வியைத் தழுவும் எனவும் மகிந்த கருதுகின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கட்சியில் இருந்துகொண்டே கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள மகிந்த முயற்சிக்கின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)



கேலிச்சித்திரம்

# ஜனாதிபதியை உள்ளே தள்ளும் முன் இரகசியங்களை வெளியிடவேண்டும்

## உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

**பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர சட்டத்தை வளைத்து ஜனாதிபதியை உள்ளே தள்ளும் முன்னர், ஜனாதிபதி தன்னிடம் இருக்கும் இரகசியங்களை வெளியிட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

புதிதாக கட்சியை ஆரம்பித்தால், இரகசியங்களை வெளியிடுவார்களாம். தங்கக் குதிரைகள், லம்போகினி, 18 பில்லியன் டொலர், ஹெலிகொப்டர் போன்ற விடயங்கள் ஏன் இன்னும் வெளிவரவில்லை என நாங்கள் எண்ணிக்கொண்டிருந்தோம்.



ஜனாதிபதி வேண்டும் என்றே இந்த இரகசியங்களை மறைத்து வைத்துள்ளார். நாங்கள் எண்ணியது போல் கட்சியை ஆரம்பிப்பதற்கும் திருட்டுகளை பிடிப்பதற்கும் இடையில் சம்பந்தமில்லை.

புதிய கட்சி தொடங்கினாலும் தொடங்காவிட்டாலும் தவறு செய்திருந்தால் தண்டனை வழங்க வேண்டும். ஜனாதிபதி என்ன சொல்ல வருகிறார்? தான் சொல்வது போல் நடந்து கொண்டால், கொள்ளைகள் பற்றிய இரகசியங்களை மறைப்பதாக கூறுகிறார்.

அப்படியானால் இது நல்லாட்சியா? என நாங்கள் கேட்க நேரிடும். கூட்டு அரசாங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவை கொண்டாட மாத்தறையில் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு போதுமான கூட்டம் வரவில்லை. இதனால், ஜனாதிபதிக்கு கோபம் வருவது நியாயமானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வித்தியாவின் தாயை அச்சுறுத்திய பெண்ணின் விளக்கமறியல் 29ம் திகதி வரை நீடிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் தாயாரை அச்சுறுத்திய பெண்ணிற்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நேற்று திங்கட்கிழமை குறித்த வழக்கு பதில் நீதவான் இ.சபேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. இதன்போதே விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு மிக கொடூரமாக கொலை செய்யப்பட்டிருந்தார். மாணவியின் சடலம் பற்றை ஒன்றுக்குள் இருந்து கோரமான நிலையில் இருந்த போது மீட்கப்பட்டிருந்தது. இந்த கொலையை புரிந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒன்பது பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில், குறித்த கொலையின் பிரதான சந்தேகநபரான சுவிஸ் குமாரின் தாயார் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு வழக்கு தவணைகளின் போது வந்து செல்வது வழமை.

இவ்வாறு ஒரு வழக்கிற்கு வந்து செல்லும் போது நீதிமன்றத்துக்கு வெளியே வைத்து வித்தியாவின் தாயாரை அச்சுறுத்தினார்.

இதனால் அச்சமடைந்த வித்தியாவின் தாயார் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினையும் செய்தார். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் சுவிஸ்குமாரின் தாயார் மற்றும் அவரோடு துணைக்கு வந்த பெண் இருவரையும் கைதுசெய்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த வழக்கினை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதிமன்று, சாட்சிகள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் விளக்கமறியலை விதித்தது. இவ்வாறு விளக்கமறியலில் இருந்த போது சுவிஸ்குமாரின் தாயார் உடற் சுகயீனம் ஏற்பட்டு இயற்கை மரணம் எய்தினார்.

இதன் பின்னர் குறித்த வழக்கில் மற்றைய பெண்மணி ஒருவரே தனியாக எதிராளியாக காணப்பட்டு இதுவரை அவரது வழக்கே மன்றிலும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் குறித்த பெண்ணின் சட்டத்தரணி வழக்கின் கடந்த தவணையின் போது எழுத்துமூல சமர்ப்பணம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இந்த எழுத்துமூல சமர்ப்பணம் தொடர்பில் நேற்றைய தினம் கட்டளை பிறப்பிக்கப்படும் என ஊர்காவற்றுறை நீதவான் கூறியிருந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கு ஊர்காவற்றுறை பதில் நீதவான் இ.சபேசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கடந்த தவணையில் சட்டத்தரணி ஊடாக மன்றிற்கு சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் தொடர்பாக கட்டளை பிறப்பிக்கப்படவுள்ளது எனவும் எனவே எதிர்வரும் ஓகஸ்ட் 29 ஆம் திகதி வரை குறித்த வழக்கை ஒத்தி வைப்பதாக பதில் நீதவான் உத்தரவிட்டார். (இ-4)

# உணவு பாதுகாப்பு வாரம் ஆரம்பம்

தேசிய உணவு பாதுகாப்பு வாரம் நேற்று ஆரம்பமானது.

இதன் நிமித்தம் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

அதற்கமைய சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள், வெதுப்பகங்கள், உணவு விடுதிகள் மற்றும் நெடுந்தூர பேருந்து சேவைகளின் போது தேநீர் போசனத்திற்கு பேருந்துகள் நிறுத்தப்படும் இடங்கள் என்பன சுற்றிவளைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபையினரும் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது ஒன்றிணைந்து செயற்படவுள்ளனர்.

மேலும் மென்பான உற்பத்திகள் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றதா? என்பது தொடர்பிலும் இதன்போது பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சட்டங்களை மீறும் வியாபாரிகள் மற்றும் உணவு உற்பத்தியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். (இ-10)

# கடற்படையினரின் பிரசன்னத்தை வடக்கு மக்கள் விரும்புகின்றனர்

## அமைச்சர் மனோ கணேசன் கூறுகிறார்

(கொழும்பு)

தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுப்பதற்காக இலங்கையின் கடற்படையினர் அவசியம் என்று வடக்கு மக்கள் கூறுவதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் சிங்கள மொழிப்பெயர்ப்பு வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன் இதனை தெரிவித்தார்.

அண்மையில் வடக்குக்கு சென்றிருந்த தம்மிடம் அங்குள்ள மக்கள் இதனை தெரிவித்ததாக அமைச்சர் கூறியுள்ளார்.

வடக்கு மக்களின் இந்த நிலைப்பாட்டை நாடு அறிந்திருப்பது அவசியம் என்று மனோ கணேசன் தெரிவித்தார்.


இதேவேளை பாதுகாப்பு படையினர் தவறு செய்திருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். போரில் ஈடுபட்ட எந்தவொரு நாட்டிலும் இது நடைமுறையில் உள்ள விடயமாகும் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையில் செயற்பட்ட இந்திய அமைதிப்படையினர், ஈராக்கில் செயற்பட்ட அமெரிக்கப்படையினர், அதே போல இலங்கையின் படையினர் எவராக இருந்தாலும், போரின்போது குற்றம் இழைத்திருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இதனைவைத்துக்கொண்டு முழு படையினரும் தண்டிக்கப்படப் போகிறார்கள் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினர் காட்டிக் கொடுக்கப்படுகிறார்கள் என்று கூறும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, 1990 ஆம் ஆண்டுகளில் ஜெனிவாவுக்குச் சென்று பாதுகாப்புக்கு எதிராக முறையிட்டமையை மனோ கணேசன் சுட்டிக்காட்டினார். (இ-10)

# கோலாகலமாக நிறைவடைந்தது
## ரியோ ஒலிம்பிக் : அமெரிக்கா ஆதிக்கம்




கடந்த 5 ஆம் திகதி பிரேசிலில் கோலாகலமாக தொடங்கிய ரியோ ஒலிம்பிக் நிறைவடைந்துள்ளது.

இந்த ரியோ ஒலிம்பிக் போட்டியில் வழக்கம்போல், அமெரிக்காவே அதிக பதக்கங்களை வென்று ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

அமெரிக்கா ரியோ ஒலிம்பிக்கில் 121 பதக்கங்களுடன் முதலிடத்தை பிடித்துள்ளது. அதில், 46 தங்கம், 37 வெள்ளி மற்றும் 38 வெண்கலம் என மொத்தம் 121 பதக்கங்கள் அடங்கும்.

27 தங்கம் உட்பட 67 பதக்கங்களை வென்றுள்ள பிரித்தானியா பதக்கப் பட்டியலில இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

பிரித்தானியா நாடு, 27 தங்கம், 23 வெள்ளி, 17 வெண்கலம் என 67 பதக்கங்களை கைப்பற்றியுள்ளது.

சீனா 26 தங்கம் உட்பட 70 பதக்கங்களுடன் 3-வது இடத்தைப் பிடித்துள்ளது. அதில், 26 தங்கம், 18 வெள்ளி மற்றும் 26 வெண்கலம் அடங்கும்.

ரஷ்யா 4-வது இடத்தைப் பிடித்துள்ளது. 19 தங்கம், 18 வெள்ளி மற்றும் 19 வெண்கலம் என மொத்தம் 56 பதக்கங்களை வென்றுள்ளது.

42 பதக்கங்களுடன் ஜேர்மனி 5-வது இடத்தைப் பிடித்துள்ளது. அதில், 17 தங்கம், 10 வெள்ளி மற்றும் 15 வெண்கலம் அடங்கும்.

இதைத்தொடர்ந்து ஜப்பான் 41 பதக்கங்கள் பெற்று 6 வது இடம், பிரான்ஸ் 42 பதக்கங்கள் பெற்று 7வது இடம், தென் கொரியா 21 பதக்கங்கள் பெற்று 8வது இடம், இத்தாலி 28 பதக்கங்கள் பெற்று 9வது இடம், அவுஸ்திரேலியா 29 பதக்கங்களும் பெற்று 10 வது இடம் என அடுத்தடுத்து பட்டியலில் இடம பெற்றுள்ளன. (க)




## இமையாணன் மத்திய வி.கழக அரையிறுதி உதைபந்தாட்டம் இன்று





(கரணவாய்)

வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டு கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டப் போட்டித் தொடர் குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் இன்று செவ்வாய்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும அரையிறுதி ஆட்டதில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டு கழகம் மோதவுள்ளது. (க-60)


## ஏல விற்பனை

யா/அச்சுவேலி மத்திய கல்லூரியில் .05/09/2016-ம் திகதி மு.ப 10.00 மணியளவில் பழைய பொருட்கள் வலயக்கல்வி பணிமனையின் சிபார்சுக்கு அமைய ஏலம் விடப்பட உள்ளது. - அதிபர்

## விற்பனையாளர் தேவை

யாழ்நகரில்இயங்கும்எமதுபுடவைநிறுவனத்துக்கு O/L / A/L படித்த புடவை அனுபவம் உள்ளவரும், பழகவிரும்புபவர்களும்தேவை.

**சென்னை பெசன் வேல்ட்**
**63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.**


# மரண அறிவித்தல்



## திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்

ஊர்காவற்றுறை சுருவிலைப் பிறப்பிடமாகவும் 43, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் கடந்த (18.08.2016) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பியப்பா சண்முகலிங்கம் (நோர்தேன் இன்டஸ்ரீஸ் ஸ்தாபகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-கண்ணம்மா தம்பதியரின் அருமை மருமகளும், சுபோதினி, சுபேந்திரன், Dr.வினோதினி, நந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும், Dr.உதயகுமரன், பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சத்தியனின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்ற Dr.ராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தலட்சுமி மற்றும் சந்திரமதி, காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா மற்றும் அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2016) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**43, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்-குடும்பத்தினர்.**
**தொ.பே : 021 222 8038**

(5698)

## நல்லைக்குமரன் மலர் - 2016 (24)
### வெளியீட்டு விழா

| | |
|---|---|
| காலம் | : நாளை 24.08.2016 புதன்கிழமை காலை 9.00 மணி |
| இடம் | : நாவலர் கலாசார மண்டபம், யாழ்ப்பாணம். |
| தலைவர் | : திரு.பொ.வாகீசன் (சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ். மாநகர ஆணையாளரும்) |
| பிரதம விருந்தினர் | : மாண்புமிகு முதலமைச்சர், நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் (முதலமைச்சர், வடக்கு மாகாண சபை) |
| சிறப்பு விருந்தினர் | : கௌரவ திரு.ஆர்.நடராஜன் அவர்கள், (இந்தியத் துணைத்தூதுவர், யாழ்ப்பாணம்) |

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 09.00 - 09.05 | இறைவணக்கம் **திருமதி. வாசஸ்பதி ரஜீந்திரன்.** ஆசிரியர் |
| 09.05 - 09.10 | வரவேற்பு நடனம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள் |
| 09.10 - 09.15 | வரவேற்புரை - **திரு.பு.ஆறுமுகதாசன்** (செயலாளர், சைவசமய விவகாரக் குழு) |
| 09.20 - 09.50 | **ஆசியுரை** 1. **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்** (நல்லை ஆதீன முதல்வர்) 2. **சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்** (பீடாதிபதி, வீணாகான குருபீடம்) 3. **ஜாக்ரத சைதன்ய சுவாமிகள்** 4. **செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்** |
| 09.55 - 10.05 | கௌரவிப்பு, **உயர்திரு தி.இராசநாயகம்** (ஓய்வுநிலை அரச அதிபர், கிளிநொச்சி) அவர்களிற்கு **யாழ் விருது வழங்கலும், பொற்கிழி வழங்கலும்** |
| 10.15 - 10.25 | மலர் வெளியீட்டுரையும், வெளியீடும் **திரு.ந.விஜயசுந்தரம்** (கௌரவ பதிப்பாசிரியர்) முதற்பிரதி பெறுவோர் - தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் |
| 10.25 - 10.45 | ஆய்வுரை **கலாநிதி செ.சேதுராஜா அவர்கள்** (ஓய்வுநிலை அதிபர், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) |
| 10.45 - 10.55 | **விசேட பிரதிகள் வழங்கல்** |
| 10.55 - 11.05 | **பரிசளிப்பு - பண்ணிசைப் போட்டி - 2016** |
| 11.05 - 11.10 | நன்றியுரை - **திரு.நா.இரகுமார்** (பொருளாளர், சைவசமய விவகாரக்குழு) |

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

# இந்தியா செல்வோருக்கு இலவச விசா

இந்தியாவிற்கு புனித யாத்திரைகளை மேற்கொள்ளும் இலங்கையர்களுக்கு விசா இலவசமாக வழங்குவதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளதாக இலங்கையின் இந்திய உயர்ஸ்தானிகர் ஆர்.கே. சிங்ஹா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரதி இந்தியத்தூதுவர் ஆரிநாதம் பாக்சீ மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முதலாவது செயலாளர் ஈசா ஸ்ரீவாத்வச ஆகியோரின் ஏற்பாட்டில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே உயர்ஸ்தானிகர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளுக்கு இந்தியா மீதான நல்லெண்ணத்தை உருவாக்க உள்ளதாகவும், இந்தியாவின் சுற்றுலா கைத்தொழிலை முன்னேற்றுவதற்கும் இந்திய அரசு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# புகையிரதத்துடன் கார் மோதி விபத்து;ஒருவர் பலி

(கொழும்பு)

இயந்திரம் மாற்றுவதற்காக நிறுத்தப்பட்டிருந்த புகையிரதத்துடன், காரொன்று மோதி விபத்துக்குள்ளானதில், காரின் சாரதி உயிரிழந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், நேற்று அதிகாலை 1.15 இற்கு கற்பிட்டி பாலாவி வீதியில் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கற்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டு விட்டு திரும்பிக் கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திருமண நிகழ்வில் கலந்து கொண்டுவிட்டு காரில் இவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்த போது பாலாவி புகையிரத நிலையத்தில் இயந்திரம் மாற்றுவதற்காக பாலாவி சீமெந்து தொழிற்சாலைக்கு சுண்ணக்கல் ஏற்றும் புகையிரதம் நிறுத்தப்பட்டிருந்த போது வேகமாக வந்த கார் புகையிரதத்தில் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

கார் விபத்திற்குள்ளாகி தீப்பற்றிக் கொண்டதோடு உடனடியாக அவ்விடத்திற்கு வந்த அப்பிரதேச இளைஞர்கள் காரின் தீயை அணைத்து, காரினுள் சிக்கிக் கொண்டிருந்த பலத்த காயங்களுக்குள்ளான இருவரையும் மீட்டு புத்தளம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்துள்ளனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட இருவரில் காரைச் செலுத்தி வந்த நபர் உயிரிழந்துள்ளதோடு மற்றையவரும் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# தாஜுடீன் கொலை விசாரணை

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளை கைது செய்ய நடவடிக்கை

பிரபல றக்பி வீரர் வசீம் தாஜுடீனின் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் இரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்படவுள்ளனர். இந்த இரண்டு அதிகாரிகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் குற்ற விசாரணை திணைக்களம் கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கலந்துரையாடலின் தீர்மானித்திற்கமைய சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை கிடைத்தவுடன் அவர்கள் உடனடியாக கைது செய்யப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. தாஜுடீன் கொலை தொடர்பில் ஜனாதிபதி செயலக தொலைபேசி அழைப்பு தொடர்பில் நீண்ட விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசாரணையின் மூலம் கொலையின் ஆரம்ப தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

கொலை இடம்பெற்ற பகுதியில் பெற்றுக்கொண்ட சீ.சீ.ரி.வி காணொலியை இன்று 22 ஆம் திகதி ஆய்விற்காக கனடாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ள நிலையில் அதன் மூலம் கொலையாளிகள் தொடர்பில் உண்மையான தகவல் வெளியாகும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-10)


## தவறிவிட்டது

கைதடி கிழக்கு கைதடியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை குணரட்ணம் என்பவருடைய 491130300V எனும் இலக்கமுடைய அடையாள அட்டையுடன் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேஸ் மற்றும் கைத்தொலைபேசியும் 23.06.2016 அன்று யாழ். நீதிமன்ற வளாகத்தினுள் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (5691)

தொடர்புகளுக்கு:- 077 959 5648



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்



சைவ பரிபாலன சபையின் முன்னாள் தலைவர் அமரர் த.சண்முகலிங்கம் அவர்களின் துணைவியாரும் தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர் Dr. ச.விநோதினி அவர்களின் தாயாருமாகிய திருமதி. இராசலட்சுமி சண்முகலிங்கம் அவர்கள் அமரத்துவமடைந்த செய்தியை அறிந்து துயரடைகின்றோம்.

அன்னாரை இழந்து துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் உயிர் அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.

சைவ பரிபாலன சபை

யாழ்ப்பாணம்.

(5694)


# செப்.முதலாம் திகதி கொழும்பு வருகிறார் ஐ.நா. பொதுச் செயலர்



ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன், செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு இறுதியுடன் ஐ.நா. பொதுச்செயலர் பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ள நிலையில், பான் கீ மூன் இலங்கைக்கான இரண்டாவது பயணத்தை, அடுத்த மாதம் மேற்கொள்ளவுள்ளார்.

செப்டெம்பர் 3 ஆம் திகதி வரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார். இதன் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசாங்க பிரதிநிதிகள் பலரையும், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் ஐ.நா. மற்றும் அனைத்துலக தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப்படுவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பனவற்றில் அவர் கவனம் செலுத்துவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)


## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம்- பாண்சுடுநர்

சங்க வெதுப்பகத்திற்கு பாண்சுடுநர் பணிக்கு ஆட்கள் தேவை. வெதுப்பக தொழிலில் அனுபவம் உள்ளவர்களும், பயிற்சி பெற விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

**தகைமை:** நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:** நாட்சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை தாங்களாகவே சுயமாக தயாரித்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:** பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி-5511)

தொலைபேசி இலக்கம்: 021 321 2797

**விண்ணப்ப முடிவுத் திகதி: 05.09.2016 ஆம் திகதி திங்கட்கிழமை**


# இராசி பலன்

23.08.2016
(ஆவணி 07, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி காலை 6.24 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.00 மணிவரை
அச்சுவினி மாலை 6.59 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம், அத்தம் | | |
| | | | சூரி, சுக்<br>புத, ராகு |
| | சனி<br>செவ் | | குரு |

**மேடம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**இடபம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மிதுனம்:** தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், நம்பிக்கைகள் நடைபெறும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைப் பெறுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் பகை அகலும்.

**கன்னி:** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**துலாம்:** உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தேக நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**தனுசு:** பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள வழி பிறக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**மகரம்:** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த கருமங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்:** பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

# வடக்கு முதலீட்டாளர்கள் சம்மேளனத்தின் தொடக்க அமர்வு







(படங்கள்:-பொ.சோபிகா)



வடமாகாண முதலீட்டாளர்கள் சம்மேளனத்தின் தொடக்க அமர்வு நேற்றைய தினம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதை நோககமாகக் கொண்டு வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய மட்டத்தின் முதலீட்டு வாய்ப்புக்களும் சவால்கள் எனும் தலைப்பில் மத்திய வங்கயின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியும், “சிறிய மற்றும் நடுத்தர தொழில வாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் எனும் கருப் பொருளிலும் யாழ். பல்கலைக்கழக முகா மைத்துவ பீட பீடாதிபதி தி.வேல் நம்பியும் வடமா காணத்தின் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய் வதற்கான புவிசார் சமூக பொருளாதார காரணிகளும் விழுமியங்களும் எனும் தலைப்பில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் தமது கருத்துரைகளை வழங்கியிருந்தனர். கருத்துரைகளை வழங்கியவர்கள் வட மாகாண ஆளுநரால் கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலும் முதலீடு தொடர்பான விளக்கங்களும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் மகிந்த அமரவீர, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எஸ்.சிவமோகன், அங்கஜன் இராமநாதன், வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன், வடமாகாண அமைச்சின் செயலாளர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், யாழ். மாவட்ட செயலகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கைத்தொழில், சுற்றுலா மற்றும் ஏற்றுமதிக்கான ஒன்றிணைந்த சேவைகள் அலுவலகத்தில் அங்கம் வகிக்கும் திணைக்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், வடமாகாணத்தில் உள்ள முதலீட்டாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(இ-9)

# காக்கைதீவில் கழிவுநீர் பரிகரிப்பு நிலையம்

## அமைச்சர் ஐங்கரநேசன் அடிக்கல் நாட்டி வைப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட வீடுகளில் இருந்தும் விடுதிகளில் இருந்தும் சேகரிக்கப்படும் கழிவு நீரைப் பரிகரிப்பதற்குரிய நிலையத்துக்கான அடிக்கல் காக்கைதீவில் நேற்று திங்கட்கிழமை நாட்டப்பட்டுள்ளது. ரூபா 18.5 மில்லியன் செலவில் அமையவுள்ள இக் கழிவுநீர் பரிகரிப்பு நிலையத்துக்கான அடிக்கல்லை வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஜங்கரநேசன் சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் எல்லைக்கு உட்பட்ட 23 வட்டாரங்களில் இருந்தும் கழவுநீர்த்தாங்கிகளின் மூலம் எடுத்து வரப்படும் கழிவுநீர் இதுவரையில் கல்லுண்டாய் பகுதியில் உரிய முறையில் பரிகரிக்கப்படாமலேயே கழிக்கப்பட்டு வந்தது. இதற்குரிய பரிகாிப்பு இயந்திர வசதி மாநகரசபையில் இல்லாததே இதற்கான காரணமாக அமைந்தது. பலரும் இதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டியதையடுத்தே யாழ் மாநகரசபையினது நிதியிலிருந்தும் உள்ளூராட்சி அமைச்சின் மாகாணக் குறித்தொது க்கப்பட்ட அபிவிருத்தி நன் கொடை நிதியிலிருந்தும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் தற் போது கழிவுநீர்ப் பரிகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

தற்போது 30 ஆயிரம் லீற்றர் வரையான கழிவு நீரே யாழ். மாநகரசபைக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அகற்றப்படுகிறது. எதிர்காலத்தில் சுற்றுலா காரணமாக விடுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் 50 ஆயிரம் லீற்றர் கழிவு நீரைப் பரிகரிக்கக்கூடிய வகையிலேயே இந்நிலையம் அமைக்கப்படவுள்ளது.

கழிவுநீர் பரிகரிப்பு நிலையத்தில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட பின்னர் வெளியேறும் நீர் இந்நிலையம் அமையவுள்ள பகுதிகளில் அமைந்திருக்கும் தென்னந்தோட்டத்திற்கு பயன்படுத்தப்பட உளளதாகவும், திண்மப்பொருட்கள் ,சேதனப்பசளைகள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் அமையவுள்ள இந் நிலையத்தின் கட்டுமானப்பணிகள் நான்கு மாதங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நாட்டு நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், யாழ் மாநகரசபை பொறியியலாளர் இ.சுரேஸ்குமார், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் அ.பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-10)




# புராண இசை நாடகங்கள்

அளவெட்டி நாகவரத நாராயணர் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய முன்றலில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற்கழகம் வழங்கும் புராண இசை நாடகங்கள் ,கூத்துக்கள் இன்றும் இடம்பெறும். இதில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணி தொடக்கம் 10 மணி வரை காத்தவராய்ன் சிந்து நடைக்கூத்து இடம்பெறும். (இ-3)

# யாழ்முரி இசைப்போட்டி -2016

சுவிஸ்விஷன் ஹனும்அமைப்பு வடக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடத்திய யாழ் முரி இசைப்போட்டியில் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளினதும் நிறுவனங்களினதும் விபரம் வருமாறு.

**இசை அரும்புகள்**

01) பாரதியார் பாடல்

முதலாம் இடம்- நல்லூர் சாரங்கா இசை மன்றம், இரண்டாம்இடம்- சக்தி மேம்பாட்டு நிலையம் காரைநகர், மூன்றாம் இடம்-வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக நுண்கலைக்கல்லூரி.

02) பக்திப்பாடல்

முதலாம் இடம்- வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்,இரண்டாம் இடம்- ஞான ஒளி அறநெறிப் பாடசாலை , மூளாய்.

03) நாட்டார் பாடல்

முதலாம் இடம்- மானிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்- வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை , மூன்றாம் இடம்- கம்சப்பிரியா இசைக்கல்லூரி யாழ்ப்பாணம்.

04) இசை மொட்டுக்கள்

முதலாம் இடம்- வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்வவுனியா, இரண்டாம் இடம் - வ/ ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக நுண் கலைக்கல்லூரி, மூன்றாம் இடம் சைவ வித்தியா விருத்திச் சங்கம் திருநெல்வேலி என வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் அறிவித்துள்ளார்.(இ

# மீள்குடியேற்றப்பட்ட மக்கள் நலன்களை அரசு அவதானத்தில் எடுக்க வேண்டும்

## டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து



வடக்கில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களில் பெரும்பாலானவர்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படாதுள்ள நிலையில், அம்மக்கள் பாரிய பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்களது நலன்கள் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளேன். நாடாளுமன்றத்திலும் இவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளேன். எனினும், இம் மக்களது தேவைகள் தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்ற நிலையிலும், அம்மக்களுக்கு நடைமுறை ரீதியில் அந்த வேலைத்திட்டங்கள் போய்ச்சேரவில்லை என்பதையே காணக்கூடியதாகவுள்ளதென தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. இம்மக்களது நலன்களில் அரசு போதிய அக்கறையுடன் அவதானமெடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இதுவரையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகள் இன்றிய நிலையிலேயே வாழந்து வருகின்றனர். நீண்ட காலமாக இடம்பெயர்ந்திருந்த நிலையில், அம்மக்களது சொந்த நிலங்கள் பாவனையின்றிய காரணத்தால் காடு மண்டிப் போய்க் காணப்படுகின்றன. இடம்பெயர்ந்து பல வருட காலமாக உரிய வருமானங்களின்றிய நிலையில் வாழ்ந்திருந்த இம்மக்களால் அப்பகுதிகளை சுத்தம் செய்து, உரிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ள இயலாதுள்ளது. எனவே, மீள்குடியேற்ற நடவடிக்கைகளை முடித்துவிட்டோமென தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் கூறுவதற்காக, மககளை அவர்களது சொநத நிலங்களில் கொண்டு விடுவது மாத்திரம் மீள்குடியேற்றமாகாது என்பதை அரசு புரிந்துகொண்டு, உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க முன்வர வேண்டும்.

தேசிய நல்லிணக்கம் தொடர்பில் பல முயற்சிகளை முன்னெடுத்து வரும் அரசு, தேசிய நல்லிணக்கத்தின் எண்ணப்பாடுகளை முதலில் எமது மக்களின் மனங்களில் உருவாக்க வேண்டும். அதற்கு எமது மக்கள் தங்களது வாழ்க்கையை நிம்மதியாக அமைத்துக் கொள்வதற்கான வழிகளை செய்து கொடுக்க வேண்டும்.

அந்த வகையில், அடிப்படையில் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய தேவையிலேயே எமது மக்கள் இருக்கின்றனர். இத் தேவைகள் முதலில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

அந்த வகையில், எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பான எனது கேள்விகளுக்கு பதிலளிக்கும் அரசு, அதனை நடைமுறைச் செயலிலும் காட்ட வேண்டுமென வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# 2017 ஆம் ஆண்டுக்கான பாதீடு நவம்பர் 10ஆம் திகதி சமர்ப்பிப்பு

(கொழும்பு)


2017 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டம் (பாதீடு), எதிர்வரும் நவம்பர் மாதம்10 ஆம்திகதியன்றுநாடாளுமன்றத்தில்சமர்பிக்கப்படும். அந்தத்திட்டத்தின்மீதானவிவாதம் டிசெம்பர்10ஆம்திகதி வரை நடைபெறும் என்றும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தை தயாரிக்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நானும் ஜனாதிபதியும்பிரதமரும்ஏற்கனவே சந்தித்திருந்தோம். 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அரசாங்கம் மாற்றமடைந்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்படவுள்ள3 ஆவதுவரவு- செலவுத் திட்டம் இதுவாகும்.

இதேவேளை, பெறுமதி சேர் வரி(வற்) திருத்தச் சட்டம் மூலம் தொடர்பில் இன்று செவ்வாய்க்கிழமை அமைச்சரவை தீர்மானிக்க வுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் பிறந்தநாள் நினைவுப் பேருரை



பாராளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் 89 ஆவது பிறந்தநாள் நினைவுப்பேருரை எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத் தலைவருமான தர்மலிங்கம்சித்தார்த்தன்தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# பூங்காக்களினூடாக நாளொன்றுக்கு 20 மில்லியன் ரூபாய் வருமானம்



(கொழும்பு)

தேசிய வனங்கள் மற்றும் பூங்காக்களினூடாக நாளொன்றுக்கு 20 மில்லியன் ரூபா வருமானம் கிடைப்பதாக வனஜீவராசிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருட இறுதிக்குள் இந்த தொகையை 23 மில்லியன்களாக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தேசிய வனங்களை பார்வையிடுவதற்கு அதிகளவில் வருகை தருகின்றமையே இந்த வருமான அதிகரிப்புக்கு காரணம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன் ஊடாக நாட்டிற்கு பாரிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் துறையாக இந்த துறை மாற்றமடைவதாகவும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார். (இ-10)

# மாயமான இரு சிறுவர்கள் கம்பளையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை முடிவடைந்ததன் பின் மாயமான சிறுவன் மற்றும் அவரது சகோதரியும் நேற்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்திற்கு நேற்று முன்தினம் புலமைப்பரீட்சைக்கு சென்ற இவர்கள் பின்னர் வீடு திரும்பாத நிலையில், அவர்களது தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும்,குறித்த சிறுவர்களின் தாய், தந்தையை விட்டு பிரிந்து வாழ்வதால், இவர்கள் இருவரும் தாயை காணச் சென்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருநதமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், குறித்த சிறுவர்கள் இருவரும் கம்பளையில் தாய் தங்கிருந்த வீட்டில்நேற்றுக்காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.(இ-10)


## பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல் , தளபாட காட்சி அறைக்கு
1.Electrician2.Show room Marketing Sales & Executives(Girls)
3.Show room Boys
➢25 Days Work For Month.➢Time 9.00 AM - 8.00 P.M.
➢மாத வேதனமாக 18000/=
ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமூகமளிக்கவும்.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்,வேம்படிச் சந்தி அருகாமையில் (5693)
12,பருத்தித்துறை வீதி , யாழ்ப்பாணம்.021 454 6699

## North Lanka IIT

அரசாங்க/தனியார் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் பதவி உயர்விற்கும் சம்பள உயர்வுக்குமான UGC அங்கிகாரம் பெற்ற கற்கை நெறிகள்.

Top Up Programme to B.Ed./Degree Certificate

Entry Qualifications

| HND | IT | English | Electrical & Electronics | Civil |
|---|---|---|---|---|
| College of Education | Tamil | Art | English | IT |
| Training College | Tamil | Art | English | IT |

பூர்த்தி செய்து சகலரும் விண்ணப்பிக்கலாம்.
Duration : 1 - 1 ½ Years
*விண்ணப்படிவத்தை சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.
*நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 27.08.2016 எமது வளாகத்தில் நடைபெறும்.
28.08.2016 விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
People's Bank Bulilding, Top Floor, Stanly Road, Jaffna.
Contact: 0767504535, 0214927088

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா:26
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:B.Eng/பொறியியலாளர் லண்டன் PR
எதிர்பார்ப்பு:சைவபோசனம்
தொ.இ: B/5046

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 59செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/5053

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 43
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/Lலண்டன் NOTPR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/5056

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 8சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Phd/ ஆராட்சியாளர் அமெரிக்கா
தொ.இ: B/5057

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 27
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSc, MA, SLAS/அரசதொழில்
எதிர்பார்ப்புசைவபோசனம் விரும்பத்தக்கது.
தொ.இ: G/1098

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 48
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: G/1108

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 63செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்HND IT/அரச தொழில்
தொ.இ: G/1128

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 27செவ் 12 இல
உயரம்: 4'3"
தகைமை/தொழில்:A/L முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/1174

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு அருள்மிகு கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

### இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில்

# எமது நாட்டிற்கு பாதிப்பற்ற வகையில் சிறந்த முடிவை எடுப்பேன்

### கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் கிளிநொச்சியில் உறுதி

(பரந்தன்)

அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கைது செய்வதில் எந்தவித மாற்றமும் இல்லை என கடற்றொழில் மற்றும் நீரியல் வளஅபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் குளத்தை அண்டிய கிராம அபிவிருத்தி எனும் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் மகிந்த அமரவீர நிகழ்வின் இறுதியில் வடக்கில் அத்துமீறி ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? என ஊடகவியலாளர்களால் தொடுக் கப்பட்ட கேள்விக்குப் பதில ளிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கைது செய்து விடுவித்துள்ளோம் அவர்களை இங்கு தடுத்து வைக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் அவர்களுடைய படகுகள் ,மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை அரச உடைமையாக்கி உள்ளோம். இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

வருகின்ற மாதம் வடக்கில் உள்ள மீனவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பிரதிநிதிகள் இந்தியா சென்று கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்கள். இந்திய அரசும் இலங்கை வந்து கலந்துரையாடல்ஒன்றை மேற்கொள்ளவுள்ளனா். அதன் பின்னர் நானும் எமது மத்திய அரசாங்க பிரதிநிதிகளும் இந்தியா சென்று மத்திய அரசாங்கத்துடன் பேசி ஒரு நல்ல முடிவை எடுக்க உள் ளோம். இதனால் பாதிக்கப்பட்டிருப்பது வடக்கு மீனவர்கள் மட்டுமல்ல. நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மீனவர்களுமே. எனவே எமது நாட் டிற்கு பாதிப்பு அற்ற வகையில் ஒரு நல்ல முடிவை எடுப்பேன் எனவும் தெரிவித்தார்.(2-312)

# விபத்தில் ஒருவர் படுகாயம்



(வவுனியா)

வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.40 மணியளவில் ஏற்பட்ட ஆட்டோ விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குருமன்காட்டு தரிப்பிடத்திலிருந்து வீதிக்கு ஏற முற்பட்ட ஆட்டோ ஒன்று வவுனியாவிலிருந்து மன் னார் வீதி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2)

# இரண்டு வெவ்வேறு குற்றச்செயல்களில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைதாகினர்

### 15,750 மில்லிலீற்றர் கசிப்பு,உழவு இயந்திரம் கைப்பற்று



(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு வெவ்வேறு இடங்களில் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தடயப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழி நடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையில் சென்ற பொலிஸ் அணியினர் கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பை அடுத்து குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தடயப்பொருட்களும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, அன்றைய தினம் அதிகாலை 5 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வசந்தபுரம் பேராறு காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட 15ஆயிரத்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று அன்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்தையன் கட்டு பேராறு பகுதியிலிருந்து அனுமதிப்பத்திரத்திற்கு முரணான முறையில் உழவு இயந்திரத்தில் மணலை ஏற்றி வந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி இரண்டு சம்பவங்களிலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் தடயப் பொருட்களையும் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்காக புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15-312)

# சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கின்றது தடுத்து நிறுத்த அதிகாரிகள் முன்வரவில்லை

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

(பரந்தன்)


கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வினைத் தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமத்தில் கடந்த பல நாட்களாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன என மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இவ்வாறானமணல்அகழ்வுகள் பெரும்பாலும் விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் மணல் அகழ்வினால் வீதிகள்,விவசாய வாய்க்கால்கள் என்பனவும் சேதமடைந்து காணப்படுகின்றன.

இவ்வாறு இடம்பெற்று வரும் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள்,கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகம் என்பன உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும் இவ்வாறான நடவடிக்கை தொடர்பாகவும் தெரிவித்துள்ள போதிலும் இதனை கட்டுப்படுத்துவதில் பொலிஸார் பாராமுகமாக இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனைக்கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-312)

# வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான சட்டப்பிரச்சினை குறித்த பயிற்சிப்பட்டறை



(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட உதவி ஆணைக்குழுவினால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழ் பணியாற்றும் அனைத்து வெளிக்கள உத்தியோத்தர்கள், அலுவலக பணியாளர்கள் ஆகியோருக்கான சட்ட பிரச்சினைகள், அதற்கான ஆலோசனைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 4 மணி வரை நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

இதன்போது பொதுமக்களுக்கு ஏற்படும் சிவில் மற்றும் குற்றவியல் பிரச்சினை, காணி உரிமம்,காணிப் பிணக்குகள், நீதிமன்ற கட்டமைப்புகள் ஆகியவை குறித்து எடுத்துக் கூறப்பட்டதுடன் இப்பிரச்சினைகளை அணுகி தீர்வை பெற்றுக் கொள்வது தொடர்பிலும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இப் பயிற்சிப்பட்டறையானது ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அநிருத்தனன் தலைமையில் ஆரம்பமானதுடன் மூத்த வழக்கறிஞர்கள் மூவர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-302)

# மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினை சீர்செய்து தரப்படும்

### கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி கௌதாரி முனை பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து பிரச்சினை என்பது பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக மிகவும் பின் தங்கிய வசதி குறைந்த கிராமங்களில் ஆரம்பக்கல்விக்கான பாடசாலை வசதிகள் உள்ள போதும் இடைநிலை மற்றும் உயர்கல்வியை கற்பதற்கு வேறு இடங்களையே நாடிச் செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் போக்குவரத்து வசதிகள் இன்மையால் மாணவர்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர் கொள்வதுடன் பாடசாலைகளை விட்டு மாணவர்கள் இடைவிலகும் நிலையும் காணப்படுகின்றது.

இந்நிலையில் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கௌதாரிமுனைக் கிராமத்தில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் மாணவர்களை ஏற்றிச்செல்வதில்லை. இதன்ால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் பாடசாலைக்கு காலம் தாழ்த்தியே செல்வதாகவும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த வாரத்திற்கு முதல் வாரம் நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு வின் மாதாந்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து கௌதாரி முனை பகுதியில் மாணவர்களுக்கான போக்குவரத்து இடர்பாட்டினை தீர்த்துக் கொள்வதற்கு தனியார் பேருந்தினை எதிர்பார்க்கமுடியாது அரச பேருந்து சேவையினருடன் கதைத்து ஒழுங்குபடுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-312)













கிளிநொச்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம், அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் என்பன ஒன்றிணைந்து தமிழர் தாயகப்பகுதிகளில் சிங்கள பௌத்த மதமாக்கலை எதிர்த்தும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் ஐ.நாவை நோக்கிய நீதிக்கான நடைபயணம் எனும் தொனிப்பொருளில் நேற்றுக்காலை 8 மணியளவில் பரந்தன் உமையாள்புரம் அம்மன் கோவில் முன்றலில் ஆரம்பித்து கிளிநொச்சி ஐ.நா. செயலகம் வரை நகர்ந்த மக்கள் போராட்ட பேரவை நிறைவில் ஐ.நா.சபையின் செயலாளர், மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோருக்கு மகஜர்கள் கிளிநொச்சி ஐ.நா. செயலகத்தில் கையளிக்கப்பட்டன. (படங்கள்:-மல்லாவி, பரந்தன் செய்தியாளர்கள்)

# ஐ.நா.நோக்கிய நீதிக்கான நடைபயணம்

## நேற்று ஆனையிறவிலிருந்து கிளிநொச்சிவரை

(மல்லாவி)

கிளிநொச்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம், அரசியல் தலைவர்கள் , மதத்தலைவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் மற்றும் உறவுகள் இணைந்து நேற்று காலை 8 மணியளவில் ஐ.நா. நோக்கிய நீதிக்கான நடைபயணம் பரந்தன் உமையாள்புரம் அம்மன் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி பேரணி கிளிநொச்சி வரை சென்று நிறைவில் ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் ஐ.நா. சபையின் செயலாளர், மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோருக்கு கிளிநொச்சி ஐ.நா. செயலகத்தில் கையளிக்கப்பட்டது.

குறிப்பாக சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் காணாமற்போனவர்களுக்கு நீதி கோரியும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் தமிழர் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கலுக்கு எதிர்ப்புத்தெரிவித்தும் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தக்கோரியும் மக்களின் நிலங்களை விடுவிக்க வலியுறுத்தியும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான நடைபயணப் பேரலை இடம்பெற்றது.

இதன்போது நடைபயணத்தில் கலந்து கொண்ட வர்கள் **“விடுதலை கோரினால் விஷ ஊசியா, நல்லாட்சி அரசா? நயவஞ்சக அரசா? நல்லிணக்கத்தின் அடையாளம் அத்துமீறிய புத்தர் சிலையா? எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நீதி வழங்கு நீதி வழங்கு காணாமற் போனவர்களுக்கு நீதி வழங்கு, இரணைதீவு எங்கள் இதயம், விடுதலை செய் விடுதலை செய் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், கொள்ளை அடிக்காதே கொள்ளை அடிக்காதே கொக்கிளாயை கொள்ளை அடிக்காதே”** போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை கைகளில் ஏந்தியிருந்தனர்.

இந்த நடைபயணத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, சி.சிறிதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், வடக்கு



மாகாண சபை உறுப்பினர்கள்,பொதுமக்கள், மதத் தலைவர்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சாமசம், பொது அமைப்புக்களின் ஒன்றியம் என்பன கலந்து கொண்டிருந்தன.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு,

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான நியாய பூர்வமான குரல்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு வகையில் தங்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்பதைதாங்கள் அறிவீர்கள்.

2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சர்வதேச ஊக்குவிப்புடன் இலங்கை அரசினுடைய நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டும் என்ற யதார்த்த கண்ணோட்டத்துடன்நல்லிணக்கம்பேசும் அரசு நடந்து கொள்ளவில்லை என்பதை அரசினுடையநாளாந்த நடவடிக்கைகள் வெளிப்படுத்தி வருகின்றன.

ஜெனிவாவில்இணைஅனுசரணையை ஏற்றுக் கொண்டு நல்லிணக்கத்திற்கான பிரதான அம்சங்களை நிறைவேற்றுகின்றோம் என தங்களுக்கு உறுதியளித்துவிட்டு அரசாங்கத்தினுடைய உறுதிப்பாட்டையும் அதன் பொருளாதார நலன்களையும் மேம்படுத்துவதை மட்டுமே நோக்காகக் கொண்டு அரசாங்க நகர்வுகள் இடம்பெற்று வருவதை உணர முடிகிறது.

இலங்கையில் நிகழ்த்தப்பட்ட சர்வதேசவிதிமுறை மீறிய யுத்தத்தின் விளைவுகளுக்கு நீதியை உறுதிப்படுத்த சமூகம் திடமான விருப்பத்தைக் கொண்டிருக்குமானால் சர்வதேச பொறிமுறை ஒன்றை நிறுவுதலே உரிய பரிகாரமாக அமைய முடியும்.

குறித்த பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படவில்லையாயின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசுடன் இணைந்து சர்வதேசம் புரிந்த அநீதியாகவே அது அமையும். ஜெனிவாவில் பரிந்துரைக்கப்பட்ட பல்வேறுபட்ட விடயதானங்களின் அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளைவிடுதலைசெய்வதற்கோ அல்லது அவர்கள் மீது சட்டத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கோ அன்றி பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கோ கடந்த 7 ஆண்டுகளாக அரசாங்கம் விருப்புடன் இருக்கவில்லையென்பதில் தங்களின் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

மேலும் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் வலிந்து சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துதல் முனைப்புப் பெற்றுள்ளது.

அரச திணைக்கள மற்றும் வாழ்வாதார நிலங்களில் படைமுகாம்களை நிறுவியிருப்பதால் சமூக சிவில் செயற்பாடுகளும் குடிமக்களின் வாழ்வாதாரங்களும் மோசமாக பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. பொது மக்களை தங்களுடைய பூர்வீக வாழ்விடங்களில் குடியேறுவதற்கு அனுமதித்தல் மிக மந்தகதியில் நடைபெற்று வருகின்றது.

படை முகாம்களின் பாதுகாப்புடன் சிங்கள பௌத்த ஆலயங்களையும் சிங்கள கலாசார சின்னங்களையும் தமிழர் தாயகத்தில் நிறுவி தமிழர்களின் பூர்வீக நிலக்கோட்பாட்டை சுத்திகரிப்புக்கு உள்ளாக்க முயற்சிகள் விரைந்து நடைபெறுகின்றன.

காணாமற்போனோர் பற்றி கண்டறிவதற்கான பொறிமுறையை, வெறும் தகவல்களை சேகரிக்கின்ற அதிகாரமற்ற செயலணியாக இயக்கி உண்மையைக் கண்டறிவதற்குப் பதிலாக நட்டஈடு வழங்குவதற்கான அலகாக மாற்ற முயற்சிக்கப்படுகின்றது.

மேற்படி விடயங்களால் நல் லிணக்க முயற்சிகள் மீது நாங்கள் நம்பிக்கை இழந்துள்ளோம்.

எனவே மேற்படி விடயங்கள் கோட்பாட்டுரீதியாக அன்றி செயல் வழி முறைகளின் ஊடாக ஆராய்ந்து பார்த்து சர்வதேச சமூகம் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நம்பிக்கை கொள்ளக் கூடியதுமான பொறிமுறை ஒன்றின் ஊடாக நல்லிணக்க முயற்சிகளை ஏற்படுத்த வேண்டும்.

60வருடகாலஒடுக்குமுறை வரலாற்றை கொண்ட ஈழத் தமிழர்களுக்கு சர்வதேச சமூகம் அர்த்தமுள்ள நீதியை பெற்றுக்கொடுக்க முடியாது போனால் தமிழ்த்தேசிய இனம் மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்கு சென்றுவிடும் என அஞ்சுகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15-271-312)

## புதிய நிர்வாகத்தெரிவும் பொதுக்கூட்டமும்

கிளிநொச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு கலாசார மண்டப ஒழுங்கையில் அமைந்துள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலக கட்டடத்தில் சங்கத்தின் தலைவர் தி.சிவமாறன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

மாற்றுத்திறனாளிகள் நலன் தொடர்பாக கிராம மட்டத்தில் இயங்கும் அவர்களது சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

(2-254)

# மனவளர்ச்சிக் குறை ஒரு நோயல்ல
# அறிவு வளர்ச்சி நின்றுவிடும் நிலை

## மனவளர்ச்சிக்குறை

இன்றைய நவீன உலகிலே விஞ்ஞான கண்டுபிடிப்புகள், தொழிலநுட்ப முன்னேற்றத்தில் மனிதன் பல சாதனைகளைப் படைத்துள்ள போதிலும் மாற்று ஆற்றலுடையோரின் பிறப்பை தடுக்க முடியாதுள்ளது. இதற்கு காரணம் மனிதனின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாறுதல்கள் ஆகும். அந்த வகையில் மனவளர்ச்சிக் குறைபாடானது அறிவுசார் குறைபாடுகள் பலவற்றுடன் தொடர்புபட்டுள்ளது எனலாம். மன வளர்ச்சிக்குறை என்பது உடலிலோ அல்லது உணர்வு உறுப்புக்களில் ஏற்படும் ஊனமன்று. இது மூளையுடனும் அதன் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்டது ஆகும். மூளையின் செயற்பாடுகளில் மிகவும் முக்கியமானது அறிவு வளர்ச்சி இதனால் நுண்ணறிவுப் பெருக்கம் ஏற்படுகின்றது. ஆனால் இவர்களுக்கு அறிவு. வளர்ச்சி தடைப்படுவதனால் இவர்களால் முன்னேற முடியாத நிலையில் உள்ளனர். மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு மாஸ்லோ குறிபபிடும் அடிப்படைத் தேவைகளான பசி, தாகம், உறக்கம் போன்றவற்றை அடைவதிலும் இடர்படுவர். இவர்களில் சிலர் அறிவுரீதியாக மட்டுமன்றி உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருப்பர்.

**மனவளர்ச்சி குறை தொடர்பான பொதுவான பிரச்சினைகள்**

மெத்தனப் போக்கு, தெளிவற்ற பேச்சு,கற்பதில் தாமதம் புரிந்து கொள்வதில் சிரமம், தீர்மானம் எடுப்பதில் சிரமம், கவனக் குறைவு, உணர்வுகளை கட்டுப்படுத்த இயலாமை, குறுகிய கால நினைவாற்றல்,உணவு உண்பதில் சிரமம்,வளர்ச்சியில் தாமதம்.

மனவளர்ச்சிக்குறை ஒரு மன நோய் அலல இரண்டிற்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு.

| மனவளர்ச்சிக்குறை | மனநோய் |
|---|---|
| 1.ஊனம் | நோய் |
| 2.மருந்துகளால் குணப்படுத்த இயலாது. | குணப்படுத்தலாம் |
| 3.அறிவு வளர்ச்சிக் குறைவு | அறிவு வளர்ச்சி சாதாரணமானதாக அல்லது கூடுதலாக இருக்கலாம். |
| 4.வளர்ச்சி தாமதம் மிக முக்கிய பங்கு வகிக்கும் | வளர்ச்சி தாமதம் ஏற்படுவதில்லை |
| 5.உடல் அமைப்பில் சில மாற்றங்கள் இருக்கும் | மாற்றங்கள் இல்லை |
| 6.மாயக்காட்சிகள் ஏற்படுவதில்லை | மாயக்காட்சிகள் ஏற்படும் |
| 7.தற்கொலை எண்ணங்கள் ஏற்படுவதில்லை | தற்கொலை எண்ணங்கள் ஏற்படும் |
| 8.மற்றவர் மீது சந்தேகம் வருவதில்லை | சந்தேகப்படுவர் |

மனவளர்ச்சிக்குறை பற்றி முதல் வரையறை கொடுத்தவர் எஸகிறால் Esquirol ஆவார். இவர் மனவளர்ச்சிக்குறை ஒரு நோயல்ல "வளர்ச்சி நின்று விடும் நிலை" என்றார்.

மருத்துவ சட்ட நிபுணரான டிரட்கோல்ட் Tredgold என்பவர் "முழுமையான அல்லது சாதாரண வளர்ச்சி அடையத் தவறிய மனதின் நிலையே மனவளர்ச்சிக்குறை" என்றார்.


கல்வியியல் நிபுணரான இங்ராம் Ingram என்பவரது கருத்துப்படி "ஆண்டு தோறும் உள்ள கல்வியளவினைச் சந்திக்கத் திராணியற்ற நிலை" என்றார்.

1983 ஆம் ஆண்டு மன வளர்ச்சிக் குறைக்கான அமெரிக்க சங்கத்தின் கருத்து குறிப்பிடத்தக்கவாறு சராசரிக்கும் கீழான பொது நுண்ணறிவு இயக்கம் அதன் காரணமாகவோ/அதனோடு ஒருங்கிணைந்த ஆற்றல் குறைவு ஆகியவை வளர்ச்சிக்காலத்தில் வெளிப்படுதலே மனவளர்ச்சிக்குறை எனலாம்.

**01. நுண்ணறிவு ஈவுப் பரவல் அடிப்படையிலான வகைப்பாடு**

**உளவியல் வகைப்பாடு**

| நுண்ணறிவு ஈவின் செயல் எல்லை | சதவீதம் | வகைப்பாடு |
|---|---|---|
| 1.70-கீழ் | 2% | மனவளர்ச்சி குன்றியோர் |
| 2.70-90 | 14% | பிற்பட்டவர் |
| 3.90-110 | 68% | சராசரி நுண்ணறிவுடையோர் |
| 4.110-130 | 14% | மீத்திறன் வாய்ந்தோர் |
| 5.130-மேல் | 2% | மேதைகள் |




நுண்ணறிவு ஈவு அடிப்படையில் உளவியல் வகைப்பாடு அமைகின்றது.

| வகைப்பாடு | நுண்ணறிவு ஈவு பரவல் |
|---|---|
| 1. குறைவான மன வளர்ச்சிக்குறை | 50-70 |
| 2. மிதமான மன வளர்ச்சிக்குறை | 35-49 |
| 3. தீவிரமான மன வளர்ச்சிக்குறை | 20-34 |
| 4. பூரண மன வளர்ச்சிக்குறை | 20 கீழ் |

**குறைவான மனவளர்ச்சிக் குறை**

◆ இப்பிரிவைச் சேர்ந்தோரே மனவளர்ச்சிக் குறைந்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் அதிகமானவர்கள் ஆவார்.

◆ குழந்தைகளாக இருக்கும் போதே வளர்ச்சியில் தாமதமாகவும் உடல் இயக்கத்தில் மந்தமாகவும் இருப்பர்.

◆ அபாயகரமான காரியங்களில் எவ்வித பயமும் இல்லாமல் ஈடுபடுவர்.

◆ எதிலும் அக்கறையோ சுறுசுறுப்போ இல்லாமல் இருப்பர்.

◆ எதையும் அறிந்து கொள்ளவோ அல்லது தாமே ஒரு காரியத்தை செய்ய வேண்டும் என்ற ஆர்வமோ இருக்காது.

◆ ஏன் எதற்கு என்று காரணம் கேட்காமல் சொன்னபடியே செய்வர்.

**மிதமான மனவளர்ச்சிக் குறை**

◆ சுயமாக உழைத்துச் சம்பாதித்து தங்களது வாழ்க்கையை நடத்துவதற்கும் சமூகத்திலே சுமுகமாக இணைந்து வாழவும் இயலாது.

◆ இவர்களது அடிப்படைத் தேவைகளை செய்வதற்கான பயிற்சியை வழங்க முடியும்.

◆ சாதாரண பாடசாலைகளில் கற்பதற்கான ஆற்றல் போதாது.

◆ தொழிற்பயிற்சிகள் வழங்கி சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு வழிப்படுத்தல்.

**தீவிரமான மன வளர்ச்சிக்குறை**

இவர்களது அறிவு வளர்ச்சி மிகவும் குறைந்த மட்டத்தில் இருக்கும்.

◆ பெரும்பாலானோருக்கு மனவளர்ச்சிக்குறை மட்டுமன்றி உடல் குறைபாடும் இருக்கும்.

◆ தீவிர மூளை வளர்ச்சிக் குறைவால் பக்கவாதம், வலிப்பு போன்றவையும் 50% சதவீதமானோருக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

◆ மற்றவர்களின் துணையில்லாமல் இவர்களால் எதையும் செய்ய முடியாது.

◆ பயிற்சியளிப்பதன் மூலம் இவர்களது அன்றாட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வழிப்படுத்த முடியும்.

**பூரண மனவளர்ச்சிக் குறை**

◆ இவர்களால் ஒன்றுமே சொந்தமாக செய்ய முடியாது.

◆ இவர்களது எல்லாத் தேவைகளையும் மற்றவர்களே செய்து கொடுக்க வேண்டும்.

◆ உடலியக்கமும் இவர்களுக்கு கடினமானதாகும்.

◆ இலகுவில் தொற்றுநோய்களுக்கு ஆளாவர். இவர்களது ஆயுட்காலம் மிகக்குறைவானதாகும்.

**கலவியியல் வகைப்பாடு**

மனவளர்ச்சி குன்றியோரின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கல்வியியலாளர்கள் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர்.

| குழுக்கள் | நுண்ணறிவு ஈவு பரவல் |
|---|---|
| 1.கல்விக்கு உட்பட்ட குழு | 50-70/75 |
| 2.பயிற்சிக்கு உட்பட்ட குழு | 30-50 |
| 3.பாதுகாப்பிற்கு உட்பட்ட குழு | 30 கீழ் |

**கல்விக்கு உட்பட்ட குழு**

இக்குழுவில் உள்ளோர் குறைவான மனவளர்ச்சி குன்றியோராவர்.

◆ இவர்களால் தரம் 6 வரை கல்வி கற்க முடியும்.

◆ சமூகத்தோடு ஒத்துப் போகப் பயிற்சியளித்தால் அவற்றைப் பின்பற்றும் மனப் பக்குவம் இவர்களுக்குண்டு.

◆ தொழிலைக் கற்றுக்கொடுத்தால் அதனைச் செய்து தன் தேவைகளை நிறைவேற்ற பணம் ஈட்டும் திறமை உண்டு.

◆ எவருடைய உதவியுமின்றி இவர்களால் தன்னிச்சையாக இயங்க இயலாது.

**பயிற்சிக்கு உட்பட்ட குழு**

◆ இக்குழுவில் உள்ளோர் மிதமான மனவளர்ச்சி குன்றியோராவார்.

◆ தரம் 1, 2 வகுப்புக்களில் கல்வி பயில முடியும்.

◆ எவ்வித பயிற்சியும் வழங்கப்படாவிட்டால் இவர்களது நிலை மோசமாகிவிடும்.

◆ அன்றாட தேவைகளை நிறைவேற்ற பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

◆ வளர்ந்த பின்னர் இடர்காப்புத் தொழில்களில் பயிற்சியளித்து ஈடுபடுத்த முடியும்.

◆ இவர்களுக்கு தொடர் கண்காணிப்பு அவசியம்.

**பாதுகாப்பிற்கு உட்பட்ட குழு**

இக்குழுவில் உள்ளோர் தீவிர மனவளர்ச்சி குன்றியோரும் பூரண மனவளர்ச்சி குன்றியோரும் ஆவர்.

◆ இவர்களால் அன்றாடத் தேவைகளையும் தன்னுதவித் தேவைகளையும் நிறைவேற்ற முடியாது. மற்றவர்களில் தங்கியிருப்போர்.

◆ தன்னிச்சையாக எதுவும் செய்ய முடியாது.

◆ இவர்களுக்கு தொடர் கண்காணிப்பும் மேற்பார்வையும் பாதுகாப்பும் அவசியம்.

◆ இவர்களை தன்னுதவிச் செயற்பாடுகளை செய்வதற்கு பயிற்றுவித்தாலே மாபெரும் வெற்றியாகும்.

**மனவளர்ச்சிக்குறை தோன்றுவதற்கான காரணங்கள**

மனவளர்ச்சிக் குறைக்கு மிக முக்கிய காரணம் நரம்பு மண்டலத்தில் ஏற்படும் பாதிப்பாகும். இது நரம்பு மண்டலத்தின் கேந்திரமையமான மூளையை பல வழிகளில் பாதிப்படையச் செய்வதனால் இந்நிலைமை ஏற்படுகின்றது.

**மூளையைப் பாதிப்புக்கு உட்படுத்தும் காரணிகள்**

1.கர்ப்பத்திற்கு முன்
2.பிரசவத்தின் போது
3.குழந்தை பிறந்த பின்பு

**கர்ப்பத்திற்கு முன்பு**

1.தாயின் ஆரோக்கியம்
2.ஜீன் கோளாறுகள்
3.குரோமோசோம் மாறுபாடுகள்
4.தாயின் வயது

◆ கருத்தரிப்பதற்கு முன்னர் தாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.

◆ ஜீன் கோளாறுகளோ குரோமோசோம் மாறுபாடுகளோ இல்லாதிருக்க வேண்டும்.

◆ ஜீன் கோளாறுகளினால் நரம்பியல் மற்றும் வளர்சிதை மாறறக் குறைபாடுகள் Meta bolic disorders ஏற்படுகின்றன.

◆ குரோமோசோம் மாறுபாடுகளினால் டவுன்சின்றோம் (Down's Syndrome) அறிகுறி ஏற்படலாம்.

◆ தாயின் வயது 18 குறைந்தோ 35 அதிகமாகவோ இருக்குமானால் மனவளர்ச்சிக் குறை ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.

**பிரசவத்திற்கு முன்பு**

கருத்தரிக்கும் நாளிலிருந்து குழந்தை பிறக்கும் நாள் வரைக்குமான காலகட்டமாகும்.

1.அதிகப்படியான கர்ப்பங்கள்
2.பிராண வாயுக்குறைவு
3.மத்திய நரம்பு மண்டல வளர்ச்சிக்குறைவு
4.RH ஒவ்வாமை
5.முதிராப் பிரசவம்
6.வளர்சிதை மாற்றக் குறைபாடு
7.மாற்றுருப் பிறப்புக்காரணிகள்

**பிரசவத்தின் போது**

◆ பிரசவத்திற்கு முன்பே பிரிந்து விடும் நச்சுக்கொடி

◆ 18 குறைந்த 35 மேற்பட்ட வயதுடைய தாயின் முதற் பிரசவம்.

◆ பிறப்பு வழி குறுகியிருத்தல

◆ பிரசவத்தின் போது கருப்பையின் இயக்கம்.

◆ ரிலாக்ஸின் (Relaxin) எனும் ஓமோன் குறைபாடு

◆ குழந்தையின் கழுத்தை நச்சுக்கொடி சுற்றியிருத்தல்.

◆ ஆயுதப் பிரசவத்தின் போதான நிலைமைகள்.

**பிரசவத்தின் பின்**

1.சிசு மஞ்சள் காமாலை
2.ஓமோன் காரணங்கள்
3.மத்திய நரம்பு மண்டலத்தின் பின்வளர்ச்சி
4நரம்பு விஷப்பொருட்கள்

**மனவளர்ச்சிக் குறை வைத் தடுக்கும் முறைகள்**

**01.முதல் நிலை தடுப்பு முறைகள்**

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைப் பிரசவிக்காமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகளை முதல் நிலை தடுப்பு முறைகள் எனலாம்.

1.பொதுக்கல்வி முறை
2.இரத்த சம்பந்தமான திருமணங்களைத் தடுத்தல்
3.ஜீன் பற்றிய ஆலோசனை
4.இரத்தப் பரிசோதனை
5.தாயின் வயது மற்றும் குடும்பக்கட்டுப்பாடு
6.சத்துணவுக் குறைபாட்டை தவிர்த்தல்
7.கதிர்வீச்சுத் தடுப்பு
8.மருத்துவப் பரிசோதனை
9.பிரசவச் சிக்கல்களை தவிர்த்தல்
10.நோய்த்தடுப்பு

**02. இரண்டாம் நிலை தடுப்பு முறைகள்**

◆ பிறந்த மனவளர்ச்சிக் குறையுடைய பிள்ளையின் குறைபாடு அதிகரிக்காமல் இருப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் முறைகளாகும்.

◆ இக்குறைபாட்டை சிறிய வயதில் இனங்கண்டு உரிய மருத்துவச்சிகிச்சை வழங்குதல.

**03. மூன்றாம் நிலை தடுப்புமுறைகள**


மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் வளர்ச்சியடைந்து வரும் காலகட்டத்தில் சமூகத்தோடு இசைந்து வாழ்வதறகான சகலவிதமான உரிமைகளையும வழங்கி உப்படுத்த லாம்.

1.பெற்றோர் ஆலோசனை
2.விசேட பாடசாலைகளில் சேர்த்தல்
3.விசேட தங்குமிட வசதி வாய்ப்புக்கள்
4.இர் காப்புத் தொழிற்கூடம
5.தொழிற்பயிற்சியும் வேலை வாய்ப்பும்
6.செயற்பாட்டு மையஙகள

போன்ற புனர்வாழ்வுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தொகுத்து நோக்குமிடத்து மனவளர்ச்சிக்குறை என்பது ஒரு நோய் அல்ல. மூளையின் தொழிற்பாட்டுக் குறைவினால் ஏற்படும் அறிவு சார் குறைபாடாகும். இந்நிலைமையை தீவிரப்படுத்தாமல் உரிய மருத்துவ ஆலோசனையுடன் சிறந்த பயிற்சியை வழங்கி அவர்களையும் சமூகத்தின் சொத்துக்களாக மாற்றுவதற்கு நாம் அனைவரும் பாடுபடுவோம்.

த.சிவகுமார்
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் ''தெய்வீகச் சொற்பொழிவு'' இன்றும் இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சைவப்புலவர் தவராசா "மனிதனும் ஆன்மீகமும்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர்கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை "தெய்வம் என்பதோர் சித்த முண்டாகி" எனும் தலைப்பில் சைவப்புலவர் சிவஸ்ரீ இ.திருமாறக் குருக்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறிவிழா இன்றும் பி.ப3மணி தொடக்கம் மாலை 6மணிவரை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் திருமதி. தெ.சுகுணரதி கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் பு.சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க்கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8மணி வரை நடத்தி வரும் "தெய்வீக இசைச்சங்கமத்தில்'' இன்று செவ்வாய்க்கிழமை இசைக்கலைமணி ஸ்ரீமதி கவிதா வாமதேவசர்மாவின் மாணவ, மாணவிகளின் இசை அரங்கம் இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாட்டு-எஸ்.துஷ்யந்தன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்-கு.ரவிசங்கர், முகர்சிங்-சி.செந்தூரன் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## வில்லிபாரதத்தில் 'பகாசூரன் வதம்'

நல்லூர் கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபை முப்பது வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் "தெய்வீகத் தொடர் இசைப்பேருரை'' நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும். இந்நிகழ்வில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ. சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் வில்லிபாரதம் பற்றிய தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை "பகாசூரன் வதம்'' பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக அருளுரைகள்

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் "ஆன்மீக அருளுரைகள்'' (ஞானயக்ஞம்) எனும் நிகழ்வு நல்லூர் ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெறும். இந்நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா "உயிர்கள் எங்கிருந்து உருவாகின்றன'' எனும் தலைப்பில் அருளுரை வழங்குவார். (இ-3)

# வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயே... என்று நல்லைக்கந்தனை வேண்டிய அருணகிரிநாதர்



ஞான பண்டிதனான முருகப்பெருமானே குருவாக வந்து அருணகிரிநாதரை தனது செங்கரத்தால் தாங்கியவராய் "சும்மாயிரு சொல்லற'' என்று உபதேசஞ் செய்து வேலின் அடியினால் அவரின் நாவிலே பிரணவத்தை எழுதி ''முத்தி'' என்று பாடுமாறு பணித்தருளினார்.

அன்றிலிருந்து திருமுருகனின் பேரழகை தமிழழகால் அலங்கரித்து பக்தியும் முத்தியும் ததும்பும் ஞானவூற்றாக பெருக்கெடுத்துப் பாயச் செய்தார் அருணகிரிநாதர். இத் துணை பக்திப் பெருக்கில் அருணகிரியார் மட்டுமின்றி அவர் தம் பாடல்களை கற்றுணர்ந்தவர்கள் யாவருமே நனைந்து திளைத்தவராயினர்.

திருமுருகன் ஒருவனையே பாடும் நியமங் கொண்டு பரமபதி விரத நிலை இதுவே என உலகுக்கு உணர்த்திய பரம குரு நாதரே அருணகிரிநாதராவார். நாதா... என்று முருகனே அழைக்க நாதப் பிரம்மமாய் விளங்கியவர். முருக பக்தியால் அளவற்ற அருளாற்றலை பெற்றவராய் ஞான குருநாதரான முருகப் பெருமான் கோயில் கொண்ட திருத்தலங்களை நெஞ்சிருத்தி பக்தித் தமிழ் புனைந்தருளினார். இவ்வண்ணமாக அவரியற்றிய திருப்புகழிலே...

''யாழ்ப்பாணாயன் பட்டின மருவிய பெருமானே'' என்று நல்லைக் கந்தப்பெருமானை விழித்துப் பாடியருளினார்.


"பூத்தார் சூடுங் கொத்தவர் குழவியர்...'' எனத் தொடங்கும் திருப்புகழ் பாடலின் ஈற்க "யாழ்ப்பாணாயன் பட்டின மருவிய பெருமானே'' என்ற வரிகள் நல்லைக் கந்தப் பெருமானை ஆராவன்பு மேலிட பாடியவை ஆகும்.

ஞான குருவான முருகப்பெருமானையே ஞான குருவாகப் பெற்ற பெரும் பேறுடையவரான அருணகிரிநாதர் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் முருகனிடத்திலே சரணாகதியடைந்த அருளாளராவார். அவரே மீண்டுமாக ''வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயே'' என்று வேண்டுவது இந்தத் தலம் மீது வழிபடும் அடியார்களை நெஞ்சிருத்தியே ஆகும். அருணகிரிநாதர் காட்டிய பக்தி நெறியில் எம்பெருமானை வழிபட்டு நல்லைப்பதி சேரும் அடியவர்கள் யாவரும் புனிதமும் பக்தியுமுடையோராக இருக்க வேண்டும். இன்றைய காலச் சூழலின் இடர்பாடுகளிலே எம்மையறியாது எம்மையே ஆட்கொள்ளும் போலி வாழ்விலிருந்தும் கேலிப் பண்பிலிருந்தும் எம்மை விடுவித்துக்.கொள்வது அவசியமாகும். மெய்ஞான நிலை நின்று நல்லவை எவை தீயவை எவை என உணர்ந்து எம்மவர்கள் காட்டி வைத்த பாரம்பரியங்களையும் அனுட்டானங்களையும் கைக்கொள்வதானது காலத்தின் தேவையாகும்.

ஆதலினால் அருணகிரிநாதப் பெருமான் நல்லைக் கந்தப்பெருமானை பாடியதற்கிணங்க வாக்கால் ஞானம் பெற்றிட எல்லாம் வல்ல நல்லைக் கந்தனை வேண்டி வாழ்வோமாக.

துரை. கணேசமூர்த்தி
ஆசிரியர்
யாழ்ப்பாணக் கல்லூரி.

## நல்லூரானுக்கு இன்று 16ஆம் திருவிழா



## நலமருள் நாயகனே



முந்தை வினையற
முருகவேள் உனைத்தொழ
எந்தையோர் எமக்கழித்த
கலைநயம் நன்றிருக்க
விந்தை பல செய்து நீ
விளையாடி மயில் மீதமர்ந்து
தந்தை கோபத்தால் பழனி
மலை மீதிருந்து இன்று
நம்பியோர்க்கருளும்
நல்லைக்கந்தா போற்றி

சி.திவ்வியா, யா/ப.மெ.மா.வி

## குமரா பாட அருள்வாய்

தேனும் தினைமாவும் தீஞ்சுவை மாம்பழமும்
நானுனக்கு நன்றாக ஊட்டிடுவேன்-வானுயர்ந்த
கோபுரங்கள் கொண்ட குமரனே நீயெனக்கு
பாபுனைந்தே பாட அருள்
சோதியாய் நின்றருளும் சுந்தரனே நல்லூரா
ஓதியே உன் நாமம் ஓம்பிடுவர்-ஏதிலியாய்
எப்போதும் ஏங்கித் தவிக்கும் எமதினத்தைக்
காப்பதுவே உந்தன் கடன்.

-வே.இராமர், கைதடி நாவற்குழி

## வினைகளைத் தீர்த்திடுவாய் நல்லைக்குமரா



நல்லூரில் வீற்றிருந்து
அடியவர்களைக் காத்தருளும்
ஆறுமுகனே
சரவணப்பொய்கைதனில் உதித்த
சண்முகனே
விரைந்தேடி வந்திடுவாய்.
எம்முன்னே
வினைகளைத் தீர்த்து
விடிவான வாழ்வொன்றைத்
தரமாட்டாயா நல்லையா

-வி.காயத்திரி

## நல்லைக்குமரனே காத்திடு



நல்லை நகர் வீதியிலே வீற்றிருக்கும்
நல்லூர்க்குமரனே
நல்லதை எண்ணியே நல்லது செய்தாய்
நல்லூர்க்குமரனே
நல்ல பக்தர்களை கரம் பிடிப்பாய்
நல்லூர்க்குமரனே
அடியவர்களைக் காத்துவரும்
நல்லூர்க்குமரனே
அருட் கடாட்சத்தை தந்திடுவாய்
நல்லூர்க்குமரனே
அடியவர்களுக்கு நலமிருந்து அருள்புரிவாய்
நல்லூர்க்குமரனுக்கு
போற்றி போற்றி ...

-சி.பால்ராஜ், யா/கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம்

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

நித்தமும் பக்தரின் சித்தமுஞ் சீராகி
நெஞ்சிலே யமைதிதருவாய்
தத்துவக் கொத்தாகி வித்தாகி முத்தாகித்
தத்துமயில் மீதுவருவாய்
வித்தகப் பெருமானுன் புத்தகக் கருணையை
வேண்டுவார் விளைவுபெறுவார்
நத்தியே யுனையென்றும் பக்தியாய்ப் பரவுவோம்
நல்லூரின் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்

## ஐ.எஸ். தீவிரவாதிகள் மீண்டும் வெறியாட்டம்

# அப்பாவி மக்கள் 40 பேர் தலையில் சூட்டுக்கொலை!

(பக்தாத்)

ஈராக் நாட்டின் மொசூல் உள்ளிட்ட பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் அரசின் உளவாளிகள் என்று சந்தேகித்து அப்பாவி பொதுமக்கள் 40 பேரை தலையில் சுட்டு படுகொலை செய்த சம்பவம் சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



சிரியா மற்றும் ஈராக் நாடுகளில் உள்ள பல்வேறு பகுதிகளை தங்கள் வசம் கொண்டுவந்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் உலகிற்கே பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர்.

அவர்களுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் சர்வதேச நாடுகளின் விமானப்படைத் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கிடையே, இந்த தீவிரவாதிகள் அப்பாவி பொதுமக்கள் மற்றும் பிணைக் கைதிகளின் தலைகளை வெட்டியும் பெற்றோல் ஊற்றி எரித்தும் சுட்டுக் கொன்றும் வெறியாட்டம் ஆடி வருகின்றனர்.

இந்நிலையில், ஈராக்கில் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள மொசூல் நகரில் உள்ள மக்களை அங்கிருந்து தப்பிக்க உதவிய அரசின் உளவாளிகள் என்று சந்தேகத்தின் அடிப்படையில் அப்பாவி பொதுமக்கள் 40 பேரை நேற்று முன்தினம் தலையில் சுட்டுக் கொன்று ஐ.எஸ். தீவிரவாதிகள் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் பெயர் பட்டியலுடன் மேற்கண்ட 40 சடலங்களும் மொசூல் நகரில் உள்ள அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-10)

## சோமாலியாவில் அடுத்தடுத்து இரு வெடிகுண்டுத் தாக்குதல்

### 10 பேர் உயிரிழப்பு



(டமாஸ்கஸ்)

சோமாலியா நாட்டின் மத்திய பகுதியில் உள்ள கல்கயோ நகரில் நிகழ்த்தப்பட்ட இரண்டு வெடிகுண்டுத் தாக்குதல்களில் 10இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவின் மத்திய பகுதியில் உள்ள கல்கயோ நகரில், நேற்று முன்தினம் அடுத்தடுத்து இரண்டு இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த இரண்டு வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவங்களில் 10இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

முதல் தாக்குதல் வெடிகுண்டு பொருட்களுடன் வந்த லொறி வெடித்து சிதறியது. பின்னர் பேருந்து ஒன்று வெடித்தது.


உள்ளூர் அரச தலைமை அலுவலகங்களை குறிவைத்து இந்த இரண்டு வெடிகுண்டுத் தாக்குதல்களும் நிகழ்த்தப்பட்டுள்ளதாக அந் நாட்டு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்தவொரு அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. இருப்பினும் சோமாலியாவில் அரசுக்கு எதிராக தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வரும் அல்-ஷபாப் போராளிக்குழு இந்த தாக்குதலை நடத்தி இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

முன்னதாக கடந்த மார்ச் மாதம் கல்கயோ நகரில் உணவகம் ஒன்றில் அல்-ஷபாப் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் மூத்த அரசு அதிகாரி உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நடிகர் கமல்ஹாசனுக்கு செவாலியர் விருது

### பிரான்ஸின் கலாசார அமைச்சகம் அறிவிப்பு



நடிகர் கமல்ஹாசனுக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான செவாலியர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

சினிமா துறையில் நடிகர் கமல்ஹாசனின் சிறந்த பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் அவருக்கு இந்த உயரிய விருதை பிரான்ஸ் நாட்டின் கலாசாரத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

களத்தூர் கண்ணம்மா படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான நடிகர் கமல்ஹாசன் கலைத்துறையில் 57 ஆண்டுகளை கடந்து மிகப்பெரும் ஜாம்பவானாக திகழ்ந்து வருகிறார்.

4 தேசிய விருதுகள், 19 பிலிம்பேர் விருதுகள் என ஏராளமான விருதுகளை பெற்றுள்ள கமல்ஹாசனின் கலைத்திறனை பாராட்டி மத்திய அரசு அவருக்கு பத்மஸ்ரீ, பத்மபூஷன் ஆகிய விருதுகளையும் வழங்கி கௌரவித்தது.


நடிகர் சிவாஜி கணேசனுக்கு அடுத்ததாக செவாலியர் விருது பெறும் தமிழ் நடிகர் கமல்ஹாசன் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஐ.நாவிலிருந்து விலகுவோம்; பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மிரட்டல்

ஐ.நா.அமைப்பிலிருந்து விலகப் போவதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகா டுடேர்தே மிரட்டியுள்ளார்.

பிலிப்பைன்ஸில் கடந்த மே மாதம் நடைபெற்ற தேர்தலில் சர்ச்சைக்குரிய முன்னாள் மேயர் டுடேர்தே வெற்றி பெற்று ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தல் பிரசாரத்தின் போது, நாட்டில் பெருகி வரும் குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கப்போவதாகக் கூறிய அவர், குற்றங்களில் ஈடுபடும் ஒரு இலட்சம் பேரைக் கொன்று கடலில் வீசப்போவதாகவும், அந்த உடல்களைத் தின்று கடல் மீன்கள் கொழுக்கும்



என்றும் பேசி பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்தச்சூழலில், அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு பிலிப்பைன் ஸில் 1,500 குற்றவாளிகள் கொல்லப்பட்டதாக பொலிஸ் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதனை ஐ.நா. அமைப்பு கடுமையாகக் கண்டித்துள்ளது.

இதுகுறித்து, விசாரணையில்லா மரண தண்டனை நிறைவேற்றங்களுக்கான ஐ.நா. சிறப்புக் கண்காணிப்பாளர் ஏக்னெஸ் காலமர்ட் கூறுகையில், போதைப் பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்களை சுட்டுக் கொல்லும் பொலிஸாருக்கு ஜனாதிபதி டுடேர்தே சட்டப் பாதுகாப்பு வழங்கியிருப்பது சர்வதேசச் சட்டத்துக்கு எதிரானது என்று விமர்சித்தார்.

இந்தச் சூழலில், ஜனாதிபதி டுடேர்தே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது,

எங்கள் நாட்டு உள் விவகாரங்களில் ஐ.நா. தலையிடுவதை ஏற்க முடியாது. எங்களை மதித்து நடக்க ஐ.நாவால் முடியாவிட்டால், அந்த அமைப்பிலிருந்து விலகி விடுவோம்.

ஐ.நாவுக்குப் பதிலாக புதிய சர்வதேச அமைப்பை ஏற்படுத்துவது குறித்து யோசித்து வருகிறேன். அந்த அமைப்பில் இணைய சீனா, ஆபிரிக்க நாடுகளுக்கு அழைப்பு விடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# சிரியா போரில் குழந்தைகளின் நிலை!
















சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரினால் அங்கு பல இலட்சம் மக்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பொது மக்கள் பலர் அண்டை நாடுகளுக்கு தஞ்சம் புகுந்து வருகின்றனர். இந்த போர் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் பற்றிய புகைப்படத் தொகுப்பு இது.

கடந்தாண்டு செப்டெம்பர் மாதம் துருக்கிய கடற்பரப்பில் மூழ்கிய மூன்று வயது சிரிய நாட்டுச் சிறுவன் அய்லான் கூர்டியின் புகைப்படம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சிரியாவிலிருந்து வெளியேறும் குடியேறிகளின் நிலையை இந்த ஒரு படம் உலகத்திற்கு அம்பலப்படுத்தியது. இதே வேளை சிரியாவின் அலெப்போ நகரில் அண்மையில் நடத்தப்பட்ட வான் தாக்குதலின் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட சிறுவனின் காட்சிகள் அதிர்ச்சியளிக்கக்கூடியவையாக இருந்தது.

இதேவேளை சிரியாவில் இடம்பெற்று வரும் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின்நிலை புகைப்படங்களாக வெளியாகி உலகளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-10)

## சிரிய கோரத்தை புடம்போட்டுக் காட்டிய சிறுவனின் சகோதரன் அலி உயிரிழப்பு!





அண்மையில் இரத்தம் வழிய புளுதி தோய்ந்த நிலையில் புகைப்படம் மற்றும் காணொலியில் தோன்றி சிரிய யுத்தத்தின் கோரத்தை வெளிப்படுத்தியிருந்த சிறுவனின். சகோதரன் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. கடந்த புதன்கிழமை ஒகஸ்ட் 17 சிரியாவின் அலெப்போ நகரில் உள்ள குவாட்ரிஸ்லில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் சேத மடைந்த கட்டடத்திலிருந்து மீட்கப்பட்ட 5 வயதுடைய சிறுவனே ஓம்ரான் டக்னிஸ். தனது உணர்ச்சியற்ற முகத்தோடு தனது தலையில் இருந்து வழிந்த இரத்தத்தை கதிரையில் துடைத்து விட்டு அங்குமிங்கும் பார்த்து, அவனையே உலகம் முழுவதையும் உற்றுப்பார்க்க வைத்தான்.

இந்த சிறுவனின் சகோதரனான அலி டக்னிஸ், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தான். இந் நிலையில் சிகிச்சை பலனின்றி அவன் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

அலிக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கும் புகைப்படம், அவன் இறப்பது சில மணிநேரங்களுக்கு முன்பு சமூக வலைத் தளங்களில் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஈரானின் முதல் வான் பாதுகாப்புத் தளபாடம்



உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் வான் பாதுகாப்புத் தளபாடத்தின் படங்களை ஈரான் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டது. "பாவர் 373" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த வான் பாதுகாப்புத் தளபாடத்தின் ஏவுகணைகள் ஈரானை நோக்கி வரும் எதிரிகளின் ஏவுக ணைகள், விமானங்கள் முதலானவற்றை இடை மறித்து தாக்கி அழிக்க வல்லவை.

ஈரான் மீது சர்வதேச நாடுகள் பொருளாதாரத் தடை விதித்த காலக்கட்டத்தில் இந்த வான் பாதுகாப்புத் தளபாடத்தை உருவாக்கும் திட்டம் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேசத் தடையால் ரஷ்யாவின் "எஸ்-300"வான் பாதுகாப்புத் தளபாடத்தைப் பெறும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டதையடுத்து, அதே போன்ற "பாவர் 373" தளபாடத்தை உருவாக்கும் முயற்சியில் ஈரான் இறங்கியது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## துருக்கி வெடிகுண்டு தாக்குதலுக்கு சிறுவனைப் பயன்படுத்திய ஐ. எஸ்




துருக்கியில் திருமண வீட்டில் நடந்த வெடி குண்டுத் தாக்குதலுக்கு 12-14 வயது சிறுவனை ஐ.எஸ் தீவிர வாதிகள் பயன்படுத்தியுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிரியா துருக்கி எல்லையில் அமைந்துள்ள காசியந்தெப் நகரில் நடந்த திருமண நிகழ்ச்சியின் போது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினார்.

இதனால் 50பேர் பலியானதாகவும், 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயங்கள் அடைந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து அந்நாட்டு ஜனாதிபதி Recep Tayyip Erdogan கூறியதாவது, இத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ் இயக்கத்தினர் குறைந்தபட்சம் 12 முதல் 14 வயது வரை உள்ள சிறுவனை பயன்படுத்தியுள்ளனர் .

திருமண வீட்டுத்தாக்குதலை தெளிவாக திட்டமிட்டு நடத்தியுள்ளனர். இதனால் நம் பாதுகாப்பு படையினர் மிக கவனமுடன் செயற்பட வேண்டும். தங்களால் முடிந்த அளவிற்கு சிறப்பான பாதுகாப்பை அளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர்கள் இரத்த வெறி பிடித்தவர்கள். நம் நாட்டை பிரித்து அவர்கள் அதிகாரத்தை செலுத்த வேண்டும் என முயற்சி செய்து வருவதாகவும் தெரிவித்தார். (இ-10)

# இராணுவ முகாம் அகற்றலில் எந்தவித உண்மையுமில்லை

## பாதுகாப்பு அமைச்சர் மறுப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் 64 இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியான செய்தியில் எந்த உண்மையும் இல்லையென பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களில் வெளியான செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த விசேட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் 162 முகாம்கள் காணப்பட்டன என்றும், இதனை ஓகஸ்ட் 31 ஆம் திகதி 98 ஆக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# பொலிஸ் திணைக்களத்தில் 9000 பதவி வெற்றிடங்கள்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் 9000 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டம் ஒழுங்கினை பாதுகாக்கும் பணிகளுக்கு அப்பால் மேலும் பணிகளில் ஈடுபடுத்த நேரிட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் இவ்வாறு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

விஹாரைகள், அரசாங்க நிறுவனங்கள், பிரபுக்கள் வீடுகள் போன்றவற்றிற்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பணிகளுக்கு சிவில் பாதுகாப்புப் படையினரை கடமையில் ஈடுபடுத்துவதன் மூலம் பொலிஸ் திணைக்களத்தில் பதவி வெற்றிடங்கள் ஏற்படுவதனை தடுக்க முடியும் என் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (இ-10)

# வற்வரி அறவிடமால் அரசுக்கு 800 கோடி ரூபாய் இழப்பாம்

வற்வரி அதிகரிக்கப்பட்ட போதும் அதை அறவிடுவதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ள நிலையில், அரசுக்கு மாதாந்தம் 800 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறைவரித் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது. கடந்த மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 11ஆம் திகதி வரை உள்நாட்டு இறைவரித்திணைக்களம் 15 வீத வரியினை அறவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. எனினும் ஜூலை மாதம் 11ஆம் திகதியிலிருந்து குறித்த வரி அறவீட்டுக்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளதால் இந்த வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நீதிமன்றின் தடைக்குப் பின்னர் புதிய வற்வரி சட்டமூலம் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இதன் காரணமாக 8 பில்லியன் வருமானம் இழக்கப்பட்டுள்ள அதேவேளை வரி அறவீட்டினால் அரசின் ஆண்டு வருமானம் 100 பில்லியன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# பல்கலைக்கழகங்களை சுயாதீனமாக்கும் நோக்கில் புதிய சட்டம் அறிமுகமாகும்

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களை சுயாதீனமாக்கும் நோக்கில் புதிய சட்டம் அறிமுகம் செய்யப்படும் என உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை சுயாதீனமாக்கும் நோக்கில் புதிய சட்டம் கொண்டு வரப்படும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து பல்கலைக்கழகங்களும் ஒரே கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். அரசாங்கம் கொள்கைகளை வகுக்கும் பணிகளை மட்டும் செய்யும்.

பல்கலைக்கழகங்கள் சுயாதீனமாக இயங்க அனுமதியளிப்பதன் மூலம் அவற்றின் அடையாளத்தை உறுதி செய்துகொள்ள முடியும்.



வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் போன்று பல்கலைக்கழகத்திற்கு தேவையான வகையில் நிர்வாக மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

வெளிநாடுகளில் மருத்துவபீடம், பொறியியல்பீடம் மட்டுமுடைய பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன.

இதேவேளை. இலங்கையிலும் பல்கலைக்கழகங்களின் தனித்துவத்தை பேணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-10)

# நெதர்லாந்தின் இளம் தம்பதிகள் கைது!

(கொழும்பு)

நெதர்லாந்தின் இளம் தம்பதிகள் கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாம் வகுப்பு டிக்கட்டுடன் சிலாபம் கோட்டை புகையிரத முதலாம் வகுப்பில் பயணம் செய்தமைக்காகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

முதலாம் வகுப்பு சொகுசு உறங்கும் அறையை பொலிஸார் பல முறை முயற்சித்தும் கூட திறக்காதமையால் புகையிதம் தாதமானது.

இந்த நிலையிலேயே குறித்த தம்பதிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## நம்மை எதைவைத்து எடை போடுகிறார்கள்?

நம்மை மற்றவர்கள் எப்படி எந்த அளவிற்கு எடைபோட்டு வைத்திருக்கிறார்கள் என்பதை அறியும் சுவாரசியம் அனைவருக்குமே இருக்கிறது.

நன்கு எடை போட்டால் மகிழ்வில் மனம் துள்ளுகிறது. குறைத்து மதிப்பிட்டாலோ சோர்ந்து போவதோடு, அப்படி மதிப்பிட்டவர்களை வெறுக்கவும் செய்கிறோம். எல்லோருக்குமே நம்மை மற்றவர்கள் உயர்வாக எடை போட வேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறது.

ஆனால் அதற்கான முயற்சி நம்மிடத்தில் இருக்கிறதா? என்பது தான் இங்கு கேள்வி. தோற்றம், வசதி, படிப்பு, நல்லவரா, செல்வாக்கு, சாதித்த சாதனைகள் ஆகியவற்றை வைத்தே நம்மை மற்றவர்கள் எடை போடுகிறார்கள். தோற்றம் என்பது சிலருக்கு இயல்பாகவே அமைந்து விடுவதுண்டு.

சிலருக்கு அமைவதில்லை. நல்ல தோற்றத்தை இயல்பில் கொண்டிராதவர்கள் தங்களால் இயன்ற அளவு நல்ல தோற்றம் ஏற்படும் வகையில் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனோதானோ என்று காட்சியளிக்கக் கூடாது.

வசதி என்பது இயல்பில் அமைந்தாலும் தோற்றத்தைப் போல் பெற முடியாத ஒன்று அல்ல. நாம் முயன்றால் நம்மால் நிச்சயம் அதை அடைய முடியும்.

மற்றவர்கள் உயர்வாக எடை போட வேண்டும் என்பதை மனதிற்குள் கொழுந்து விட்டு எரியும் ஆர்வமாக வளர்த்துக் கொண்டால் போதும். அந்த உணர்வே நம்மை வசதி படைத்தவர்களாக ஆக்கிவிடும்.

படிப்பும் சிலரால் முடிகிறது. சிலரால் முடிவதில்லை. படித்தும் சிலர் மூளைக்கு வேலை தராமலும், பண்பு இல்லாதவர்களாகவும் நடந்து கொள்வதைப் பார்க்கிறோம். இந்த இரண்டையும் தவிர்க்க முடிந்தால் படிக்காததை மற்றவர்கள் ஒரு குறையாகச் சொல்ல மாட்டார்கள். குறைத்தும் எடை போட மாட்டார்கள்.

நாம் நல்லவர்களாய் இருந்து மட்டும் பயனில்லை, நம்மை எடை போடுகிறார்களே, அவர்களிடம் நாம் நல்லவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். எனவே, சில சமயங்களில் நல்லவர்களாகக் காண்பித்துக் கொள்ள வேண்டிய அவசியம் உண்டு.

எல்லோரும் நம்மை இனி நன்கு எடை போட்டு நம் செல்வாக்கை உயர்த்துவது இருக்கட்டும், ஏற்கனவே நாம் கொஞ்சமாவது செல்வாக்கு பெற்றிருக்க வேண்டும்.

"சாதாரணமாகத் திரிஞ்சாம்பா, இன்னிக்கு அவனுக்குக் கீழே இருநூறு பேர் வேலை செய்றாங்கப்பா"! என்பது போன்ற விடயங்களும் பிற சாதனைகளும் நம்மைப் பற்றி உயர்வாக எடைபோட வைக்கும். இருந்தாலும் நாம் எடுபடுவது கஷ்டம்தான்.

முன்கூறிய பட்டியலில் எது இல்லா விட்டாலும் பரவாயில்லை. ஒன்றிரண்டில் கூடுதல் மதிப்பெண்ணைப் பெற்றுக் குறையாய் உள்ள இடத்தை நிரப்பிவிட முடியும்.

இவையெல்லாம் போக நம்மை இவர் சரியாக எடைபோட்டு வைத்து, உரிய இடத்தை நமக்குத் தருகிறாரா? என்று மற்றவர்கள் நம்மைப் பற்றி யோசிப்பார்கள்.

இதில் நாம் தவறு செய்தோமானால் எல்லாவற்றிலும் நல்ல மதிப்பெண் பெற்றுத் தேறியிருந்தாலும் நாம் பெறப் போவது தோல்வியே!

**லேனா தமிழ்வாணன்**

## வணிகக்கல்வியும் கணக்கீடும் பகுதி-II

- ◆முதலாம் வினா கட்டாயமானது
- ◆ஏனைய நான்கு வினாக்களுக்கு மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளிக்குக
- ◆ஆகக்குறைந்தது பகுதி I,II இலிருந்து இவ்விரண்டு வினா வீதம் தெரிவு செய்க.

(01) சதுன் என்பவர் தனது க.பொ.த. உயர்தரத்தை வணிகப் பிரிவில் பயின்றவர். பல்கலைக் கழகம் அனுமதி பெறாமையால் சப்பாத்து உற்பத்தி வியாபாரமொன்றை ஆரம்பிக்க உத்தேசித்தார்.01.01.2015இல் நண்பர் நிமாலை இணைத்துக்கொண்டதுடன் நண்பன் வணிக முகாமை கற்கை பயின்றதால் வணிக முகாமை நடவடிக்கையை மேற்கொள்கிறான். இருவரும் மூலதனமாக ஆளுக்கு ரூபா 200.000 என முதலிட்டதுடன் மேலதிக மூலதனமாக ரூபா 150.000இற்கு வங்கிக்கடன் ஒன்றையும் பெற்றுக்கொண்டனர். இந்நிறுவனத்தின் ஜனவரி மாதத்திற்கான கொடுகல்-வாங்கல் வருமாறு.

01.02 - ரூபா 10000 இட்டு நடைமுறை க/கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.
01.04 - சரத்திடமிருந்து உற்பத்திக்காக ரூபா 50.000 பெறுமதியான இயந்திரம் கொ/வு செய்யப்பட்டது.
01.06- ரூபா25.000 பெறுமதியான மூலப்பொருட்கள் கடனுக்கு கொ/வு செய்யப்பட்டது.
01.07 - ரூபா42.000 பெறுமதியான சப்பாத்துக்கள் காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.

1.மேற்குறிப்பிட்ட தகவலுக்கு அமைவாக இது எவ்வகையான வணிக அமைப்பாகும்?
2.மேற்குறிப்பிட்ட தரவுக்கு அமைவாக இவ் வணிகத்தின் பலவீனங்களை தருக?
3.இவ் வணிகத்தினை திறமையாக நடத்திச் செல்ல உதவும் துணைச் சேவைகள் 4 பெயரிடுக?
4.நிமாலினால் மேற்கொள்ளப்படும் முகாமைத்துவ செயற்பாடுகள் 4 தருக?
5. இவ் வணிகத்தின் ஆரம்ப மூலதனத்தை கணிப்பிடுக?
6. வங்கிக்கடன் பெற்ற பின் இவ்வணிகத்தின் நிதி நிலைமை கணக்கீட்டு சமன்பாட்டில் காட்டுக?
7. இவ் வணிகத்தில் பேணப்படும் 3 மூல ஏடுகளை தருக?
8. வங்கி நடைமுறை கணக்கை ஆரம்பிப்பதற்கான இரட்டை பதிவுகள் எவை?
9. ஒரு காசோலை குறுக்கிடுவதற்கான இரு நோக்கங்களை தருக?
10. இவ் வணிகத்தின் 07.01.2015 ற்கான காசு மீதியை கணிக்குக?

### பகுதி 1

(02) இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
1. தேவை.விருப்பங்களை இவ்விரண்டு உதாரணத்துடன் சுருக்கமாக விபரிக்குக?
2. வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் இரு தரப்பினரை பெயரிட்டு அவர்களின் இலக்குகள் இவ்விரண்டு வீதம் தருக?
3. (a) வணிகச் சூழலானது இரண்டாக வகைப்படுத்தப்படுகிறது. அவை எவை?
   (b) பொருளாதார சூழல் உள்ளடங்கும் 4 காரணிகளை தருக?
4. வணிகத்தின் பலம். அச்சுறுத்தல் இவ்விரண்டு வீதம் தருக?
5. உரிமை அடிப்படையில் வணிகத்தினை வகைப்படுத்துக?

(03)
1. ஒரு வணிகத்தினை பதிவு செய்வதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் 4 தருக?
2. பங்குடைமை ஒப்பந்தத்தில் உச்ச பங்காளர் எண்ணிக்கையை வரையறுக்கும் பங்குடைமை சட்டம் எது?
3. ஜப்பானில் இருந்து இலங்கை ஒரு மோட்டார் வாகனத்தை கொண்டுவருதல் எவ்வகை வியாபாரமாகும்?
4. (a) சில்லறை வியாபாரத்தில் இரு வகைகளை தருக?
   (b) மொத்த வியாபாரத்திற்கும் சில்லறை வியாபாரத்திற்கும் இடையிலான இரு வேறுபாடுகளை தருக?
5. நிலையான சேமிப்பு கணக்கிற்கும் சேமிப்பு வைப்புக் கணக்கிற்கும் இடையிலான இரு வித்தியாசங்களை தருக?

(04.)
1. "காசோலை" எனும் பதத்தினை வரையறுக்குக?
2. இலத்திரனியல் பணத்தினை பயன்படுத்துவதிலுள்ள இருவரையறைகள் எவை?
3. காப்புறுதியில் தொடர்புபடும் 3 தரப்பினரை குறிப்பிட்டு சுருக்கமாக விபரிக்குக?
4. தொடர்பாடல் முறைமையை வரைபடத்தில் காட்டுக?
5. போக்குவரத்தின் அடிப்படை மூலகங்களை ஒவ்வொரு உதாரணத்துடன் தருக?

### பகுதி 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

(05)
1. பின்வரும் கொடுக்கல்-வாங்கல் கணக்கீட்டு சமன்பாட்டில் பதிந்துகாட்டுக.
   சொத்துக்கள் = மூலதனம் + பொறுப்புக்கள்
- ◆2016/1/1- உரிமையாளரால் ரூபா 10.000 மூலதனமிடப்பட்டது..
- ◆2016/1/2 -ரூபா 20.000 இற்கு பொருள் கொள்வனவு செய்யப்பட்டது.
- ◆2016/1/3 -ரூபா 10.000 வைப்பிலிடப்பட்டது.
- ◆2016/1/4 -ரூபா 50.000 பெறுமதியான வங்கிக்கடன் பெறப்பட்டது.
- ◆2016/1/5- தனது சொந்த செலவிற்காக உரிமையாளரால் ரூபா 5.000 காசு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2. கீழ்தரப்பட்ட அட்டவணைக்கேற்ப கணக்கீட்டு சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல்-வாங்கலினை (திகதி மற்றும் பெறுமதியுடன்) தருக?

| திகதி | சொத்துக்கள் | மூலதனம் | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 07/01 | அதிகரிப்பு | அதிகரிப்பு | |
| 07/05 | அதிகரிப்பு குறைவு | | |
| 07/08 | குறைவு | குறைவு | |
| 07/10 | | | குறைவு |

ஜனவரி மாதத்திற்கான காசேடு வருமாறு

காசேடு

| திகதி | விபரம் | பே.இ | தொகை | | திகதி | விபரம் | பே.இ | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1/1 | மூலதனம் | | 100 000 | | 1/2 | கட்டிடம் | | 75 000 |
| 1/3 | வங்கிக்கடன் | | 20 000 | | 1/4 | கொள்வனவு | | 10 000 |
| 1/6 | விற்பனை | | 5000 | | 1/10 | மின்சாரம் | | 1000 |
| 1/7 | வட்டி வருமானம் | | 4000 | | | | | |
| | | | | | | | | |

பின்வரும் காசேட்டு கொடுக்கல்-வாங்கல்களுக்கான இரட்டை பதிவுகளை தருக.

(06)
1. வங்கி கூற்று மீதியும் வங்கி கணக்கு மீதியும் வேறுபடுவதற்கான 4 காரணங்களை தருக?
2. கமலா வணிகத்தின் வங்கி கூற்றும் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 15/5/1 | மீதி கொண்டுவரல் | 500 000 | 15/5/1 | நிமல் (கா.இ 100) | 10 000 |
| 15/5/2 | காசு வைப்பு | 20 000 | 15/5/9 | அனில் (கா.இ 101) | 6000 |
| 15/5/10 | காசோலை வைப்பு(301) | 8000 | 15/5/27 | கமல் (கா.இ 102) | 2000 |
| 15/5/22 | காசோலை வைப்பு(408) | 3000 | 15/5/30 | வாடகை(கா.இ 103) | 6000 |
| | | | 15/5/31 | சுனில் (கா.இ 104) | 1000 |
| | | | 15/5/31 | மீதி கொ.செ | 56000 |
| | | 81 000 | | | 81 000 |

வங்கிக்கூற்று

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 2015/5/1 | மீதி | | | 50 000 |
| 2015/5/1 | நிமால் (கா.இ 100) | 10 000 | | 40 000 |
| 2015/5/2 | காசு வைப்பு | | 20 000 | 60 000 |
| 2015/5/3 | காசோலை வைப்பு-பியால் | | 5000 | 65 000 |
| 2015/5/9 | காசோலை (கா.இ 101) | 6000 | | 59 000 |
| 2015/5/10 | காசோலை வைப்பு (கா.இ 301) | | 8000 | 67 000 |
| 2015/5/28 | வங்கி கட்டணம் | 400 | | 66 000 |
| 2015/5/28 | நிலையியற் கட்டளை (காப்புறுதி) | 2000 | | 64 000 |
| 2015/5/31 | காசோலை புத்தக அறவீடு | 100 | | 64 500 |

பின்வருவனவற்றை தயாரிக்குக
1."கமலா" நிறுவனத்தின் சீராக்கம் செய்த வங்கிக்கணக்கு
2. வங்கிக்கணக்கிணக்க கூற்று

(07.)
1. பரீட்சை மீதி சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் 4 வழுக்களை தருக?
2. கயான் நிறுவனத்தின் 31/12/2015 ஆம் ஆண்டிற்கான பரீட்சை மீதி சமப்படவில்லை. இவ் வேறுபாட்டு தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டதோடு பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டன.
- ◆விற்பனை கணக்கின் கூட்டுத் தொகை ரூபா 3 000 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.
- ◆செலுத்திய காப்புறுதி ரூபா5 000 காப்புறுதி கணக்கில் ரூபா500 என வரவு வைக்கப்பட்டது
- ◆ரூபா 10 000 பெறுமதியான இயந்திர செலவு இயந்திர கணக்கில் வரவு வைக் கப்பட்டுள்ளது.
- ◆ரூபா 4000 பெறுமதியான பொருள் பற்று பற்றுக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றை தயாரிக்குக
1. வழுக்களை சீராக்கம் செய்வதற்கான பொது நாட்குறிப்பேடு பதிவுகள்
2. தொங்கற் கணக்கு
3. பின்வரும் மீதிகளை கொண்டு ஜிகான் நிறுவனத்தின் 31/12/2015 இற்கான பரீட்சை மீதியை தயாரிக்குக.

கடன் பட்டோன் 90 000
கடன் கொடுத்தோர் 40 000
கொள்வனவுகள் 250 000
பெற்ற கழிவுகள் 10 000
வங்கி மேலதிக பற்று 20 000
மூலதனம் 100 000
காசு 130 000
விற்பனை 300 000

◆◆◆

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

வலம்புரி கல்விப்பிரிவு

## சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

### வணிகக்கல்வியும் கணக்கீடும் பகுதி-I, II விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 3 | 21) | 2 | 31) | 2 |
| 02) | 4 | 12) | 1 | 22) | 1 | 32) | 3 |
| 03) | 3 | 13) | 2 | 23) | 3 | 33) | 3 |
| 04) | 2 | 14) | 4 | 24) | 1 | 34) | 3 |
| 05) | 2 | 15) | 2 | 25) | 2 | 35) | 1 |
| 06) | 3 | 16) | 3 | 26) | 3 | 36) | 4 |
| 07) | 1 | 17) | 2 | 27) | 3 | 37) | 3 |
| 08) | 1 | 18) | 2 | 28) | 3 | 38) | 2 |
| 09) | 4 | 19) | 1 | 29) | 4 | 39) | 2 |
| 10) | 2 | 20) | 4 | 30) | 3 | 40) | 3 |

### பகுதி - 2

01)
1. பங்குடைமை
2. திறன் வாய்ந்த முகாமை
   நிதி ஆளுமை / அதிக மூலதனத்தை பெற்றுக்கொள்ளல்.
3. வங்கி. காப்புறுதி. தொடர்பாடல். போக்குவரத்து
4. திட்டமிடல். ஒழுங்கமைத்தல். நெறிப்படுத்தல். கட்டுப்படுத்தல்
5. ரூபா 400.000
6. 

| சொத்து | = | மூலதனம் | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| 400 000 | = | 400 000 | | |
| 150 000 | = | | + | 150 000 |
| 550 000 | = | 400 000 | + | 150 000 |

7. காசேடு. கொள்வனவு நாளேடு. விற்பனை நாளேடு. பொது நாட்குறிப்பேடு
8. வங்கிக் கணக்கு வரவு
   காசுக் கணக்கு செலவு
9. கூடிய பாதுகாப்பினை பெற்றுக் கொடுத்தல்.
   குறிப்பிட்ட தொகை உரிய நபருக்கு கிடைக்கப் பெறச் செய்தல்.
10. 

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 400 000 | வங்கி 000 | 10 000 |
| வங்கிக்கடன் | 150 000 | | |
| விற்பனை | 42 000 | மீதி/கொ/வ | 582 000 |
| | 595 000 | | 595 000 |
| மீதி/கொ/வ | 582 000 | | |

02)
1. மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியம் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை தேவையாகும்.
   உ+ ம்
   உடை. உறைவிடம். உணவு
   விருப்பம் என்பது தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் வடிவம் அல்லது மனநாட்டமாகும்.
   உ+ ம்
   சாரி. வீடு. குடிசை. பாண்
2. உரிமையாளர் - மூலதனத்தை ஈடுபடுத்தல். இலாபம் உழைத்தல்
   வணிகத்தின் வளர்ச்சி
   முகாமையாளர் -முகாமைத் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
   வணிக வளங்களை செயற்படுத்தல்
   ஊழியர்கள் - பாதுகாப்பான வேலை. நியாயமான சம்பளம்.

16 ஆம் பக்கம் பார்க்க...

## வணிகக்கல்வி விடைகள் தொடர்ச்சி...

3. (i) அகச்சூழல். புறச்சூழல்
   (ii) சம்பள மட்டம். விலை மட்டம். பணவீக்கம்
4. பலம் - போதியளவு மூலதனம் காணப்படல்
   முகாமையாளர் அனுபவம்
   பணியாளரின் விசேட திறனும் அர்ப்பணிப்பும்
   அச்சுறுத்தல் - போட்டியாளர் உருவாதல்.
   இயற்கை அனர்த்தம்.
5. தரம் 10 வணிகக் கல்வியும் கணக்கீட்டு புத்தகத்தின் பக்க எண் 31 ஐ பார்க்க

03)


1. இலகுவாக வங்கிக் கடன்களை பெற்றுக் கொள்ளல்.
   வணிகத்தின் உரிமையை உறுதி செய்தல்.
   அரசிடமிருந்து மானிய மற்றும் ஏனைய சலுகைகளை பெற்றுக் கொள்ளல்.
2. 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டம்
3. இறக்குமதி வியாபாரம்
4. (i) நிலையான பாரியளவிலான சில்லறை வியாபாரம்
   நிலையான சிற்றளவு சில்லறை வியாபாரம்
   நடமாடும் சிற்றளவு சில்லறை வியாபாரம்
   (ii) தரம் 11 வணிகக் கல்வியும் கணக்கீட்டு புத்தகத்தின் பக்க எண் 05 ஐ பார்க்க.

5.

| சேமிப்பு வைப்பு கணக்கு | நிலையான சேமிப்பு கணக்கு |
|---|---|
| குறைந்தளவு வட்டி | கூடியளவு வட்டி வீதம் |
| ஏந்நேரத்திலும் பணத்தை வைப்பிலிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும் | குறிப்பிட்ட கால வரையறை உண்டு |
| புத்தகம் வழங்கப்படும் | வைப்பு சான்றிதழ் வழங்கப்படும் |

04)

1. நடைமுறைக் கணக்கு உரிமையாளரால் குறித்த பணத்தை குறித்த நபருக்கு அல்லது கொண்டு வருபவருக்கு செலுத்தும் படி வங்கிக்கு விடுவிக்கப்படும் எழுத்து மூலமான கட்டளை காசோலை ஆகும்.
2. தரவுகள் அழிவுறக் கூடிய தன்மை.
   புதிய வடிவிலான இலத்திரனியல் மோசடிக்கு உட்படல்.
   மேலதிக செலவு
   எல்லா கொடுப்பனவிற்காகவும் எல்லா விற்பனை நிறுவனங்களில் மேற்கொள்ள முடியாமை.
3. 1ஆம் பிரிவினர் - காப்புறுதியை வழங்குபவர் (காப்புறுத்துவோன்)
4. 3ஆம் பிரிவினர் - காப்புறுதி ஒப்பந்தத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய அனைத்து பிரிவினரும்.
5.




வழி / மார்க்கம் - வீதி. புகையிரத பாதை. நீர் வழி. வான் வழி
ஊடகம் - பஸ். புகையிரதம். கப்பல். ஆகாயவிமானம்
வலு / சக்தி – பெற்றோல். வாயு. மின்சாரம். சூரிய சக்தி. கலப்பு தொழில்நுட்பம்.
தரிப்பிடம் - பேருந்து தரிப்பிடம். துறைமுகம். புகையிரத நிலையம். விமான நிலையம்.

05)

1.

| திகதி | சொத்து = | மூலதனம் + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 01.01 | +100 000 | +100 000 | |
| 01.02 | +20 000 | | |
| | (20 000) | | |
| 01.03 | +100 000 | | |
| | (100 000) | | |
| 01.04 | +50 000 | ............... | +50 000 |
| | (5 000) | (5 000) | |

2. 7/1 - ரூபா 50 000 மூலதனம் முதலிடப்பட்டது.
   7/5- ரூபா 10 000 வங்கியிலிடப்பட்டது.
   7/8- ரூபா 1 000 காசு பற்று
   7/10- கடன் கொடுத்தோருக்கு ரூபா 5 000 செலுத்தப்பட்டது.
3. 1/1 காசு க/கு வரவு 100 000
   மூலதனக் க/கு செலவு 100 000
   1/2 கட்டிடக் க/கு வரவு 75 000
   காசு க/கு செலவு 100 000
   1/3 காசு க/கு வரவு 200 000
   வங்கிக் கடன் க/கு செலவு 200 000
   1/4 கொள்வனவு. க/கு வரவு 100 000
   காசு க/கு செலவு 100 000
   1/6 காசு க/கு வரவு 5 000
   விற்பனைக் க/கு செலவு 5 000
   1/7 காசு க/கு வரவு 4 000
   வட்டி வருமான க/கு செலவு 4 000
   1/10 மின்சார க/கு வரவு 1 000
   காசு க/கு செலவு 1 000

06)

1. வைப்பில் இடப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகள்
   சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்
   நேரடி வைப்புக்கள்
   நிலையியற் கட்டளை பெயரிலான கொடுப்பனவுகள்.
   வங்கிக் கட்டணங்களும் காசோலை கட்டணங்களும்

2. சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி/கொ/வ | 56 000 | வங்கி அறவீடு | 400 |
| நேரடி வைப்பு-பியால் | 5 000 | நிலையியற் கட்டளை | |
| | | காப்புறுதி கொடுப்பனவு | 2 000 |
| | | காசோலை புத்தக கட்டணம் | 100 |
| | | மீதி/கொ/வ | 58 500 |
| | 61 000 | | 61 000 |
| மீதி/கொ/வ | 58 500 | | |

3. வங்கி இணக்க கூற்று

| | | |
|---|---|---|
| சீராக்கப்பட்ட வங்கி க/கு மீதி | | 58 500 |
| கூட்டு | | |
| சமர்ப்பிக்கப்படாத காசோலை | | |
| கா.இல 102 | 2 000 | |
| கா.இல 103 | 6 000 | |
| கா.இல 104 | 1 000 | 9 000 |
| | | 67 500 |
| கழி | | |
| வசூலிக்கப்படாத காசோலை | | |
| கா.இல 408 | (3 000) | (3 000) |
| வங்கி கூற்று மீதி | | 64 500 |

07)

1. இரட்டை பதிவில் ஒரு பதிவை மட்டும் பதிதல்
2. இரட்டை பதிவில் ஒரு பதிவு சரியாகவும் மற்றைய பதிவு பிழையான தொகையும் பதியப்பட்டிருத்தல்.
3. இரட்டை பதிவுகள் உரிய கணக்குகளில் ஒரே பக்கத்தில் பதிதல்
4. பரீட்சை மீதியை சமப்படுத்துகையில் ஏற்படும் கூட்டுத்தொகை பிழைகள்
5. பேரேட்டு கணக்கு சமப்படுத்துகையில் ஏற்படும் பிழைகள்

பொது நாட்குறிப்பேடு

| திகதி | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| | விற்பனை க/கு | 3 000 | |
| | தொங்கல் க/கு | | 3 000 |
| | (விற்பனை கணக்கில் மிகையாக பதியப்பட்ட 3 000 சீராக்கப்பட்டது) | | |
| | காப்புறுதி க/கு | 4 500 | |
| | தொங்கல் க/கு | | 4 500 |
| | (காப்புறுதி க/கு ல் பதிவழிக்கபட வேண்டிய 5000/=. 500 என பதிவழிக்கப்பட்டது சீராக்கப்பட்டது. | | |
| | இயந்திர திருத்த செலவு | 10 000 | |
| | இயந்திர க/கு | | 10 000 |
| | (இயந்திர திருத்த செலவு 10 000 இயந்திர கணக்கில் பதிவழிக்கப்பட்டது சீராக்கப்பட்டது. | | |
| | தொங்கல் க/கு பற்று கணக்கு (பற்று கணக்கில் இருமுறை பதியப்பட்டது) | 4000 | 4000 |

தொங்கல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி/கொ/வ | 3500 | விற்பனை | 3 000 |
| பற்று | 4 000 | காப்புறுதி | 4 500 |
| | 7500 | | 7500 |

ஜிகான் நிறுவனத்தின் 31.12.2015 இல் பரீட்சை மீதி

| பேரேட்டு கணக்கு | வரவு | செலவு |
|---|---|---|
| கடன் பட்டோர் | 90 000 | |
| கடன் கொடுத்தோர் | | 40 000 |
| கொள்வனவு | 250 000 | |
| பெற்ற கழிவு | | 10 000 |
| வங்கி மேலதிகப்பற்று | | 20000 |
| மூலதனம் 1.1.2015 | | 100 000 |
| காசு | 130 000 | |
| விற்பனை | | 300 000 |
| | 470 000 | 470 000 |

◆◆◆

## 21.08.2016 ஆம் திகதி வெளிவந்த கிராமசேவகர் போட்டிப்பரீட்சை-2016 மொழித்திறன் வினாத்தாளுக்கான விடைகள்

1) வேலைப்பளு 2) வெற்றிலை
3) பட்டினி 4) சவர்க்காரம்
5) நீரிழிவு நோய் 6) தொழிற்றுறை
7) புனருத்தாரணம் 8) மேற்கோள்
9) வெண்டைக்காய் 10) சம்பந்தி
11) ஒவ்வொரு பிள்ளையும் தன் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்ட வேண்டும்.
12) எண்ணம் தான் எல்லா புதுமைகட்கும் கண்டுபிடிப்புகளுக்கும் ஆதாரங்களாக அமைகின்றது.
13) சரி/ பெண் ஒருத்தி அங்கே வந்தாள்.
14) யானைக்கூட்டம் அவ்விடத்தே நிற்கின்றது.
15) கன்னங்கரா தலைமையிலான விசேட கல்வி ஆணைக்குழுவினர் இலவசக் கல்வியைச் சிபார்சு செய்தனர்.
16) ஒவ்வொரு பாடலும் இனிமையும் எளிமையும் வாய்ந்ததாக இருந்தது.
17) சரி 18) சரி
19) இங்கே பமலன் வந்தானா? அல்லது நாய் வந்ததா? 20) சரி
21) ஏகபோகம் 22) ஐம்புலன்கள்
23)வர்த்தமானி 24)கடல்
25)பவள விழா 26)3
27)3 28)2
29)3 30)1
31)3 32)3
33)4 34)2
35)2 36) அ
37)இ 38) 2
39) 1 40) இ

## பொது உளச்சார்பு வினாத்தாளுக்கான விடைகள்

1) 26 10) 469
2) 50 11) 215
3) su 12) 23
4) 49 13) 5
5) 26 14) 2
6) 27 15) 4
7) 65 16) II,III மாத்திரம்
8) 37 17) 1
9) 255 18) 1

தொடர்பு-வலம்புரி கல்விப்பிரிவு
தொ.பே:-076 6363 378



தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# ஜனாதிபதியால் பிளவுபட்டுள்ள சுதந்திரக்கட்சி-பசில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏற்கனவே பிளவுபட்டு விட்டது. அதற்கான பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஏற்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தாம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமக்கும் இடையில் உள்ள உடன்பாடு ஒன்றுக்கு அமையவே, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிளவுபடுத்த தாம் முயற்சிப்பதாக வெளியான தகவலை அவர் மறுத்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பிரதமரை தாம் உத்தியோகபூர்வமாக சந்திக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருக்கும் ஜனாதிபதியின் எதிர்ப்பாளர்கள் இணைந்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கப் போவதில்லை என்று தெரிவித்தார். எனினும் புதிய எதிர்க்கட்சி அலை ஒன்று உருவாக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டி யிடுவாரா? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பசில், இப்போதைக்கு அது தொடர்பில்கூற முடியாதுஎன்றும் தெரிவித்துள்ளார்.



தமது குடும்பம் அமெரிக்காவில் உள்ள நிலையில் நீதிமன்ற உத்தரவு காரணமாக அவர்களை சென்று பார்க்க முடியவில்லை என்றும் பசில் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வங்கி ஊழியரின் பதிவு


(கொழும்பு)

புனேவைச் சேர்ந்த வங்கி ஊழியர் ஒருவர் ஒரு புகைப்படத்தை வெளியிட்டு இந்திய நாட்டையே உலுக்கியுள்ளார்.

சுவாதி சிதால்கர் என்ற பெண், தனது பேஸ்புக் பக்கத்தில் தான் வங்கியில் வேலை பார்த்துக் கொண்டிருப்பதையும் தனது நாற்காலிக்கு பின்னால் தரையில் தனது குட்டி மகன் படுத்து பால் புட்டியை வாயில் வைத்திருப்பதையும் போன்ற புகைப்படத்தை தனது முகநூலில் வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் கூறியுள்ளதாவது, தரையில் கிடப்பது எனது மகன் அல்ல, எனது இதயம். அவனுக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் என்னோடு இருக்க வேண்டும் என ஆசைப்பட்டான்.

ஆனால், என்னால் விடுமுறை எடுக்க முடியவில்லை. ஏனெனில் வங்கியில் லோன் விடயம் தொடர்பான பணி கொஞ்சம் இருந்ததால் வேலைக்கு வந்து விட்டேன்.



தரையில் படுத்துக் கொண்டு எனது மகன் பாலை குடித்துக்கொண்டிருக்கிறான், இதற்கு இடைப்பட்ட நேரத்தில் எனது பணியை முடித்து விட்டேன். நான் மட்டுமல்ல பணிக்கு செல்லும் பல்வேறு பெண்கள் இதுபோன்று இக்கட்டான சூழ்நிலைகளை சமாளித்துக் கொண்டுதான் பணியாற்றி வருகின்றனர்.

நாங்கள் இப்படி பணியாற்றுகையில் சட்டசபையில் அமைச்சர்கள் தூங்கி விழுவது எந்த வகையில் நியாமானது. மக்களின் பிரச்சினைகளை முன்னெடுத்து அதற்காக தீர்வினை காண வேண்டும்.குழந்தையை நான் பார்த்துக்கொண்டது போன்று, பொதுமக்களை அரசியல்வாதிகள் அக்கறையுடன் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த புகைப்படத்தின் மூலம் அரசியல்வாதிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும் என ஆசைப்பட்டேன். அதன்படியே இந்த புகைப்படத்தினை வெளியிட்டுள்ளேன் என கூறியுள்ளார்.

இவரின் இந்த பதிவினை பல்வேறு நபர்கள் பரிமாற்றம் செய் துள்ளனர். (இ-10)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 813

Search for people, places and things Nagendram Home

**பிரேமா**

இதயம் என்பது ஒரு வினோதமான
சிறைதான் !
ஏனென்றால் ..
இதில் குற்றம் செய்பவர்கள்
மாட்டிக் கொள்வதில்லை.
பாசம் வைப்பவர்கள் மட்டுமே
மாட்டிக் கொள்கிறார்கள் !



**சியாமளா**




**நிசாந்**

பணக்காரர்கள்
இட்லியைக்கூட
கரண்டியால்தான்
எடுப்பார்கள்.
ஏனென்றால் அவர்கள்
கை அவ்வளவு அழுக்கு!
கவியரசு கண்ணதாசன்



**கமல்**

ஐந்து வயதில்
ஹீரோவாகி
இருபது வயதில்
வில்லனாகி
ஐம்பது வயதில்
தெய்வமாகிறார்
அப்பா




**உஷாந்தன் நெய்மார்**

உங்களுக்கு மதிப்பில்லை
என்று நீங்கள் உணரும்
இடங்களில் மௌனமாக
இருக்க பழகுங்கள்

காலப்போக்கில் உங்கள்
மௌனம் உங்களுக்கான
மதிப்பை அங்கே
ஈட்டித்தரும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனாதிபதியின் வாகனச்சாரதி திருப்பதியில் திடீரென மாயம்



திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் நேற்று முன்தினம் வழிபாடு நடத்தச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கார்ச்சாரதி காணாமற் போனதால், 12 நிமிடங்களுக்கு மேலாக காரில் காத்திருக்க நேரிட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சனிக்கிழமை இரவு பெங்களூர் வழியாக திருப்பதியைச் சென்றடைந்தார்.

பத்மாவதி விருந்தினர் மாளிகையில் இரவைக் கழித்த அவர், நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் சுப்ரபாத சேவையின் போது, திருப்பதி தேவஸ்தானத்துக்கு குடும்பத்தினருடன் சென்று வழிபாடு நடத்தினார்.

மைத்திரிபால சிறிசேன வழிபாடு முடித்துக் கொண்டு திரும்பி வந்து காரில் அமர்ந்த போது, சாரதி அங்கு இருக்கவில்லை. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. அவசர அவசரமாக திருப்பதி தேவஸ்தான பாதுகாப்பு அதிகாரிகள் அவரைச் சூழ்ந்து பாதுகாப்பு அளித்தனர்.

12 நிமிடங்களுக்குப் பின்னர் சாரதி வந்து சேர்ந்தார். அவர் ஏழுமலையானை வழிபடச் சென்றதே பரபரப்புக்குக் காரணமாகும்.

இதையடுத்து பத்மாவதி மாளிகைக்குத் திரும்பிய ஜனாதிபதி மீண்டும் 6.30 மணியளவில் குடும்பத்தினருடன், ஏழுமலையான் ஆலயத்துக்குச் சென்றார்.

மிக முக்கிய பிரமுகர்கள் வழிபடும் நேரத்தில், அவர் குடும்பத்தினருடன் சென்று வழிபாடு நடத்தினார்.

இதையடுத்து, விருந்தினர் விடுதிக்குத் திரும்பிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பெங்களூருக்குப் பறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதி திருப்பதி பயணம் குறித்து முன்கூட்டியே தகவல் தரப்படாததால் பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்பட்டதாகவும் இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 50 | 60 | 50 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 200 | 80 | 120 | 160 | 160 | 200 |
| தக்காளி | 40 | 50 | 50 | 60 | 60 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 50 | 80 | 100 | 90 | 80 | 100 |
| கோவா | 120 | 100 | 80 | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 100 | 200 | 100 | 140 | 120 | 160 | 140 |
| பூசணி | 30 | 30 | 25 | 50 | 40 | 60 | 60 |
| புடோல் | 50 | 50 | 20 | 60 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 80 | 120 | 80 | 100 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 60 | 100 | 60 | 80 | 60 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 85 | 80 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 80 | 100 | 60 | 120 | 80 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 | 60 | 50 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | — | 140 | 120 | 120 | 180 |
| பயற்றங்காய் | 80 | 50 | 60 | 80 | 50 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 80 | 120-160 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 30 | 40 | 60 | 50 | 80 | 70 |
| கறிமிளகாய் | 150 | 100 | 130 | 160 | 120 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 60 | 30 | 60 | 60 | 100 | 80 | 80 |
| போஞ்சி | 180 | 150 | 130 | 160 | 160 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 40 | 50 | 50 | 60 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 10 | 20 | 30 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 180 | 800 | 150 | 240 | 180 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 15-25 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 170 |
| வெங்காயப்பூ | 120 | — | 100 | 120 | 100 | 200 | 140 |
| முள்ளங்கி | 30 | — | 30 | 60 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 30 | 30 | 50 | 40 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 'பிரபாகரன் இறந்து விட்டார்' 257

## பத்மநாதன் பரபரப்பு அறிக்கை

அவருடன் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிருபர்கள் உடன் சென்றனர். போர்ப் பகுதிகளையும் நிவாரண முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளையும் ஹெலிகொப்டர் மூலமாக பான் கீ மூன் பார்வையிட்டார். அவருடன் நிருபர்களும் அந்தப் பகுதிகளை ஆய்வு செய்தனர்.

போர்ப் பகுதிகளுக்கு நிருபர்களை அரசு அனுமதித்தது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் அவர் ஆய்வு செய்தார். அந்த மாவட்டத்தில் உள்ள மெனிக்பார்ம் முகாமுக்கு பான் கீ மூன் நேரடியாக சென் றார். அங்குள்ள அப்பாவி தமிழர்களின் நிலையைப் பார்த்தார். வரிசையாக அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் தங்க வைக்கப்பட்டு இருந்தனர். அவர்களைச் சுற்றிலும் கடுமையான இராணுவ பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

### குடும்பங்கள் சேர வேண்டும்

குடும்பங்களைப் பார்வையிட்ட பிறகு பான் கீ மூன் கூறியதாவது, போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் மனக் காயங்களை ஆற்ற வேண்டும். போரினால் சிதறிய ஒவ்வொரு குடும்பமும் மீண்டும் ஒன்றுசேர வேண்டும். சமூகத்தில் மீண்டும் ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும்.

இதைத்தான் அரசிடம் ஐ.நா. வலியுறுத்துகிறது. இந்தப் பணிகளில் உதவுவதற்கு ஐ.நா. தயாராக இருக்கிறது. இவ்வாறு பான் கீ மூன் கூறினார்.

### திடீர் அறிக்கை

இந்த நிலையில் அதே செல்வராசா பத்மநாதன் பெயரில் 24-05-2009அன்று அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

பத்திரிகை அலுவலகங்களுக்கு பக்ஸ் மூலம் அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது.

அதில் பிரபாகரன் வீர மரணம் அடைந்து விட்டதாகவும் அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 25-05-2009 அன்று முதல் ஒரு வாரம் வீரவணக்க வாரமாகக் கடைப்பிடிக்கும் படியும் கூறப்பட்டிருந்தது. அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருந்ததாவது,

### இறுதி வரை மக்களுடன்

போர் நெருக்கடியான கட்டங்களை எட்டி எமது நிலப்பரப்புகள் எதிரியால் சுற்றி வளைக்கப்பட்டு ஒரு பெரும் யுத்தம் எம்மக்கள் மீது ஏவி விடப்பட்ட போதும் தலைவர் தான் வாழ்ந்த மக்களுடனேயே நின்றார். மக்கள் மற்றும் தளபதிகளின் தொடர்ச்சியான வேண்டுகோளை விட்டு வெளியேற மறுத்தார்.

எமது மக்கள் எதிர் கொண்ட அத்தனை வலிகளையும் தானும் சுமந்தார். இறுதியில் விடுதலைக்கான இந்த நீண்ட பாதையில் எந்த மக்களுக்காக ஆயுதம் ஏந்தினாரோ அந்த மக்களுக்காகவே கடைசி மணித்துளி வரை நின்று போராடி வீர மரணமடைந்தார். எம் மக்களுக்கு உரிமைகளைப் பெற்று கொடுங்கள் என்பதே அவருடைய இறுதி வேண்டுகோளாக இருந்திருக்கிறது.

### அணையாது காப்போம்

வரலாற்றில் ஓர் உண்மை மனிதனாக ஒரு விடுதலைப் போராளியாக அடிமைப்பட்டுப் போன ஓர் இனத்தின் மீட்பராக ஒரு சமூகத்தின் அரசியல் வழிகாட்டியாக விடுதலையின் ஓர் குறியீடாக தமிழினச் சின்னமாக உலகத்தமிழ் இனத்தின் வரலாற்று நாயகனாக வாழ்ந்து எங்கள் தேசியத் தலைவர் மறைந்து விடவில்லை.





தமிழீழ தேசத்தின் தலைமை சுடராக எம்தேசமெங்கும் அவர் ஒளி வீசிக் கொண்டு இருக்கிறார். தலைவர் ஏற்றிய விடுதலை நெருப்பை அதன் இறுதி இலக்கு வரை அணையாது காப்போம். தலைவரின் வீர மரணத்தால் தம்மையோ, ஏனையோரையோ வருத்திக் கொள்ளும் எந் தவித நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### பரபரப்பு

லண்டன் பிபிசி வானொலிக்கு தொலைபேசி மூலம் அளித்த பேட்டியிலும் செல்வராசா பத்மநாதன் பிரபாகரன் மரணம் பற்றி குறிப்பிட்டு இருந்தார். அந்தப் பேட்டியில் விடுதலைப்புலிகள் இனி அஹிம்சை வழியில் தமிழர்கள் உரிமைக்காகப் போரிடப் போவதாகவும் அவர் கூறியிருந்தார்.

செல்வராசா பத்மநாதனின் அறிக்கையும் பேட்டியும் உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் பத்மநாதன் வெளிநாட்டில் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் சர்வதேச தொடர்பாளராகப் பிரபாகரனால் நியமிக்கப்பட்டவர், செல்வராசா பத்மநாதன். விடுதலைப்புலிகளுக்கு வெளிநாடுகளில் ஆயுதங்கள் வாங்கி அனுப்புவது, வெளிநாடுகளில் நிதி திரட்டி அனுப்புவது, தனித் தமிழ் ஈழம் அமைய வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்டுவது ஆகிய பணிகளை இவர் கவனித்து வந்தார்.

இந்த நிலையில் பிரபாகரன் மரணத்துக்குப் பிறகு பத்மநாதன் விடுதலைப்புலிகள் அமைப்பின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டதாகவும் தனி ஈழம் அமைய அவர் தொடர்ந்தும் பாடுபடுவார் என்றும் விடுதலைப் புலிகளின் இணையத் தளம் அறிவித்தது.

(தொடரும்)

# அம்மை நோய்க்குத் தடுப்பு மருந்தை கண்டுபிடித்த விஞ்ஞானி காலமானார்



(வோஷிங்டன்)

அம்மை நோயை ஒழிக்கும் தடுப்பு மருந்தை கண்டுபிடிக்கும் வல்லுநர்கள் குழுவுக்கு தலைமை தாங்கி, உலகம் முழுவதும் பிறந்த குழந்தைகளுக்கு அம்மை தடுப்பூசி போடும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அரும்பங்காற்றிய மூத்த விஞ்ஞானி டி.ஏ. ஹென்டர்சன் (வயது-87) காலமானார்.

உலகம்முழுவதும்உள்ள கோடிக்கணக்கான மக்களை அச்சுறுத்திய அம்மை நோய்க்கு கடந்த 1960 ஆம் ஆண்டுகளில் தடுப்பு மருந்து கண்டறிய காரணமாக இருந்தவர்களில் முக்கியமானவர் டொனால்ட் ஏ. ஹென்டர்சன்.

அந்த காலகட்டத்தில் உலகம் முழுவதும் பரவலாக அம்மை நோயால் பல கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் ஐரோப்பிய கண்டத்தில் வெகுவாக பரவிய இந்நோயை கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சி பணிக்காக கடந்த 1972 ஆம் ஆண்டு அப்போதைய யுகோஸ்லேவியா நாட்டில் உள்ள பெல்கிரேச் நகருக்கு ஹென்டர்சன் சென்றார்.

உலக சுகாதார நிறுவனத்தின் பெருமுயற்சியால் அம்மை நோய்க்கான தடுப்பு மருந்தை கண்டுபிடிக்கும் வல்லுநர்கள் குழுவுக்கு ஹென்டர்சன் தலைமை வகித்தார்.

அமெரிக்காவின் மிகவும் பிரபலமான ஜான்ஸ் ஹாப்கின்ஸ் மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் புளூம்பர்க் சுகாதாரக் கல்லூரி ஆகியவற்றின் பீடாதிபதியாக கடந்த 1977-1990 ஆண்டுகளுக்கிடையே பணியாற்றிய இவர், பின்னாளில் இந்த இரு நிறுவனங்களும் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோய்க்கான தடுப்பு மருந்துகளை கண்டுபிடித்து, தயாரிக்கும் ஆராய்ச்சிக்கான தனிப் பிரிவை உருவாக்கினார். உலகம் முழுவதும் பிறந்த குழந்தைகளுக்கு அம்மை தடுப்பூசி போடும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அரும்பங்காற்றி சுமார் பத்தாண்டுகளில் பரவலாக அம்மை நோயை இவர் கட்டுப்படுத்தினார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு வாக்கில் அமெரிக்காவை 'ஆந்த்ராக்ஸ்' என்ற கொடிய நோய்க்கிருமி தாக்கியபோது அந்நாட்டின்சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கான சிறப்பு முகாம் அலுவலகத்தின் தலைவராக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இவரை நியமித்தார்.

அந்நாட்டின் மிக உயரிய விருதான ஜனாதிபதியின் சுதந்திர விருதை கடந்த 2002 ஆம் ஆண்டில் பெற்றுள்ள ஹென்டர்சன். அண்மைக்காலமாக முதுமை சார்ந்த காரணங்களால் பாட்லி மோரில் உள்ள பிரபல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை டி.ஏ. ஹென்டர்சன் காலமானதாக அவரது குடும்பத்தினர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர். (இ-10)

# முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி விவகாரம்

# யாழ்.வந்த அமெரிக்க வைத்தியர்களுக்கு நெறிமுறை அனுமதி வழங்கப்பட்டதா?

## பல்கலை. ஆசிரியர் சங்கம் கேள்வி

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்தில் அமெரிக்க விமானப்படை வைத்தியர்கள் நடத்திய மருத்துவ முகாமில் இலங்கைக் குடிமக்களிடம் இருந்து இரத்த மாதிரிகளை பரிசோதனைக்காக பெறுவதற்கு இலங்கையின் உரிய அதிகாரிகளிடம் நெறிமுறை அனுமதி பெறப்பட்டதா? என்று தேசிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.**

இது தொடர்பாக, தேசிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி சன்ன ஜெயசூரிய கருத்து வெளியிடுகையில், புனர்வாழ்வின் போது முன்னாள் புலிப்போராளிகள் சிலருக்கு விஷ ஊசி செலுத்தப்பட்டதாக கூறப்படுவது தொடர்பான பரிசோதனைகளுக்காக, சில முன்னாள் போராளிகளிடம் அமெரிக்க வைத்தியர்கள் இரத்த மாதிரிகளை பெற்றதாக சங்கத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

சிகிச்சைக்கு அப்பாற்பட்ட தேவைக்காக தனிநபர்களிடம் இருந்து இரத்த மாதிரிகளைப் பெறுவதற்கு நெறிமுறை அனுமதி பெறப்பட வேண்டும்.

இந்த நடைமுறை பின்பற்றப்பட்டதா? என்று இலங்கை மருத்துவச் சங்கம் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றிடம் அறிந்து கொள்ள விரும்புகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## இந்தியப் பிரதமர் மோடியின் பாணியில்

# அணிசேரா நாடுகளின் மாநாட்டை புறக்கணித்தார் ஜனாதிபதி மைத்திரி



வெனிசுவேலாவின் கராகஸ் நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்கும் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைவிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அணிசேரா நாடுகளின் தலைவர்களின் 17ஆவது உச்சிமாநாடு, அடுத்த மாதம் 17, 18ஆம் திகதிகளில் கராகஸ் நகரில் நடைபெறவுள்ளது.

அணிசேரா நாடுகளின் அமைப்பின் ஆரம்பகால உறுப்பு நாடுகளில் ஒன்றான இலங்கையின் சார்பில் இந்த மாநாட்டில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழு பங்கேற்கும் என்றே முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், இந்த மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்கமாட்டார் என்றும் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை குழுவுக்கு அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையேற்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இந்த மாநாட்டைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலேயே, ஜனாதிபதியும் இந்த மாநாட்டில் பங்கேற்கும் திட்டத்தைக் கைவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை, ஐ.நா பொதுச்சபையின் 71 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் செப்டெம்பர் 19 ஆம் திகதி நியூயோர்க் செல்லவுள்ளார்.

அவர் செப்டெம்பர் 24 ஆம் திகதி கொழும்பு திரும்புவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

# குடிநீருக்கு SLS சான்றிதழ் செப்டெம்பர் முதல் கட்டாயம்

அனைத்து குடிநீர் போத்தல்களுக்கும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் (SLS) தரச் சான்றிதழ் கட்டாயம் என நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் குறித்த விடயம் அமுல்படுத்தப்படுவதாக அதிகார சபை மேலும் அறிவித்துள்ளது. குடிநீர் போத்தல் தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை காரணமாக குறித்த முடிவுக்கு வந்துள்ளதாக சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-10)

# ஸ்ரீல.சு.கட்சி அமைப்பாளராக காமினி திலக்கசிறி நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹோமாகம தொகுதிக்கான புதிய தொகுதி அமைப்பாளராக மேல் மாகாண அமைச்சர் காமினி திலக்கசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தனது நியமனக் கடிதத்தை அவர் பெற்றுக் கொண்டார். (இ-10)

# ஜேர்மனியிலிருந்து கொழும்புவர 15 மணித்தியாலங்கள் தாமதம்

## விமானி பணி இடைநிறுத்தம்

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்துக்கு சொந்தமான விமானமொன்று 15 மணித்தியாலங்கள் தாமதமாக பயணத்தை ஆரம்பிக்க காரணமாக இருந்த தலைமை விமானி உடன் அமுலுக்கு வரும்வகையில் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஜேர்மனியின் ஃபிராங்ஃபர்ட் விமான நிலையத்தின் தலைமை விமானி மதுபான பரிசோதனையில் தோல்வியடைந்ததன் காரணமாக அவரால் விமானத்தை செலுத்த முடியாது போனதாகவும் அதனால் 15 மணி நேர தாமதத்தின் பின்னர் பிறிதொரு விமானியை பயன்படுத்தி விமானத்தை இலங்கை நோக்கி செலுத்தி வந்ததாகவும் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காகவே பணி இடைநிறுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு சொந்தமான UL554 எனும் விமானம், கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.20 மணிக்கு ப்ரங்பேர்ட் விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்கவிற்கான பயணத்தை ஆரம்பிக்கவிருந்தது.

இந்த விமானத்தில் கட்டுநாயக்க நோக்கி பயணிப்பதற்காக, 259 பயணிகள் தயாராகவிருந்தனர். எனினும் விமானப் பணியாளர் ஒருவர் வருகை தராமையால் விமானம் புறப்படுவதில் 15 மணித்தியால தாமதம் ஏற்பட்டது.

தாமதம் தொடர்பில் பயணிகளிடம் மன்னிப்பு கேட்டுள்ள விமான நிறுவனம், ஐரோப்பிய ஒன்றிய ஒழுங்கு விதிகளுக்கமைய தாமதத்திற்காக பயணிகளுக்கு நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதன்படி பயணியொருவருக்கு 600 யூரோக்களை ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய, ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் பயணியொருவருக்கு செலுத்த வேண்டிய தொகை 96,960 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2016–16.09.2016

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



*சாதுரியமாகப் பேசி எதையும் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற கும்ப ராசி நேயர்களே!*

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்ம கேதுவின் ஆதிக்கம் கூடுதலாக இருக்கின்றது. எனவே ஆன்மீக வழிபாடுகளின் மூலமே அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ள இயலும். அதே நேரத்தில் சப்தம ஸ்தானத்தில் சூரியனோடு ராகு இணைந்திருக்கிறார். எனவே குடும்ப பிரச்சினைகள் அதிகரிக்கும். இனம் புரியாத கவலை மேலோங்கும். எதற்காக இந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்று தெரியாமலேயே செய்து விட்டு பிறகு வருத்தப்படுவீர்கள். வாழ்க்கையில் அனுபவங்களை கொள்முதல் செய்துகொள்ளும் நேரமிது.

அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும். அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைத்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆயினும் அதன் பார்வை பலத்தால் ஓரளவு சிக்கல்களிலிருந்து விடுபட வழிபிறக்கும். சப்தம ஸ்தானத்தில் புதன், சுக்ரன் இணைந்து செயற்படுவதால் பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் அகலும். புதிய தொழிலில் தடம் பதிக்க நினைப்பீர்கள். ஆர்வக்கோளாறின் காரணமாக அனைவருக்கும் உதவி செய்து விட்டுப் பிறகு அவர்களால் வருத்தமடையும் சூழ்நிலையும் உருவாகும்.

உங்கள் ராசிநாதன் சனி, வக்ர இயக்கத்தில் இருக்கின்றார். எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். மனக்கவலையும், அதனால் வரும் வாய்ப்புகளை உபயோகப் படுத்திக் கொள்ளாத நிலையும் உருவாகலாம். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். என்ன இருந்தாலும் சகாய ஸ்தானாதிபதி செவ்வாய் லாப ஸ்தானத்திற்கு வரும் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. அதன் பிறகு விரக்தி மனப்பான்மை அகலும். வியாபார விரோதங்கள் விலகும். அரை குறையாக நின்ற பணிகள் முடிவடையும். அருகில் இருப்பவர்களின் ஆதரவும் கூடுதலாக இருக்கும்.

இம்மாதம் பிள்ளையார் சதுர்த்தி வருவதால் அன்றைய தினம் விநாயகரைக் கவசம் பாடி முறையாக வழிபடுவது நல்லது. அதிலும் குறிப்பாக உங்கள் ராசிநாதன் சனி என்பதால் விநாயகப் பெருமானையும், அனுமனையும்

## மாதத்தின் பிற்பாதி மகிழ்ச்சி பெருகும்!

ஒவ்வொரு சனிக்கிழமையும் வழிபட்டு வருவதன் மூலம் உன்னதமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

சப்தம ஸ்தானத்தில் இதுவரை சஞ்சரித்து வந்த சுக்ர பகவான் ஓகஸ்ட் 26ஆம் திகதி அஷ்டம ஸ்தானத்திற்கு செல்லப் போகின்றார். 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன் 8இல் நீச்சம் பெறும்பொழுது தாய்வழி ஆதரவு குறையலாம். உறவினர் பகை அதிகரிக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பாகப்பிரிவினைகள் இழுபறி




நிலையில் இருக்கும். அண்ணன் ஒத்து வந்தால் தம்பி ஒத்துவரவில்லை. தம்பி ஒத்துவந்தால் அண்ணன் ஒத்துவரவில்லை என்ற நிலை உருவாகலாம். பயணங்களை மாற்றியமைப்பீர்கள்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

இக்காலம் ஒரு பொற் காலமாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து தொகை கிடைக்கும். அரசுவழிச் சலுகைகள் கிடைத்து மகிழ்ச்சி கொள்வீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து அரிய யோசனைகளைச் சொல்வர். வெளி நாட்டு அனுகூலம் உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடை அகலும். ஏதேனும் ஒரு இடத்தை விற்று விட்டு அதில் வரும் இலாபத்தைக் கொண்டு கடன் சுமையை குறைத்துக் கொள்வீர்கள். இம்மாதம் விநாயகப் பெருமான் வழிபாடு உங்கள் வேதனைகளைப் போக்கும். ஜென்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது. அதன்மூலம் தடைகள் அகலும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய மாதமாகும். தோழிகளை நம்பி ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்து சேரும். தொழில் மாற்றச் சிந்தனைகளும், இடமாற்றச் சிந்தனைகளும் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதே வெற்றிக்கு வழி. பிள்ளைச் செல்வங்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். தொல்லை தந்த எதிரிகள் விலக வைரவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். மாதக் கடைசியில் உத்தியோக பிரச்சினை அகலும். ராகு-கேதுக்களுக்கு பிரீதி செய்வதன் மூலம் பண வரவில் இருந்த தடை அகலும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**

ஓகஸ்ட்: 21, 22, 25, 26.
செப்டெம்பர் : 5, 6, 11, 12.



*நாணயத்தையும், நம்பிக்கையையும் இரு கண்களாகப் பாவித்து நடக்கும் மீன ராசி நேயர்களே!*

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் குரு சப்தம ஸ்தானத்தில் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்க்கின்றார். குருவின் நேர் பார்வையால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லைகள் படிப்படியாகக் குறையும். வெற்றிக்குரிய தகவல் வீடு வந்து சேரும். முற்றிலும் தெரியாத தொழிலில் ஈடுபட்டவர்கள் கூட முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்வர்.

குடும்பப் பிரச்சினைகள் அகலும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும். படுக்கையில் இருந்து வைத்தியம் பார்த்தவர்கள் கூட, இனி பம்பரமாகச் சுழன்று பணிபுரியப் போகிறார்கள். அடுக்கடுக்காக நல்ல தகவல்கள் வந்து சேரும். அண்டை, அயலாருடன் ஏற்பட்ட சண்டை, சச்சரவுகள் அகலும். என்றைக்கோ கொடுத்த தொகை இப்பொழுது கைக்கு கிடைக்கும். தொழிலில் முழுமையாக ஈடுபாடு செலுத்துவீர்கள்.

வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினை அகலும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். இதுவரை பல வழிகளிலும் முயற்சி செய்து பலன் அளிக்கவில்லையே என்று கவலைப் பட்டவர்கள் இப்பொழுது ஒரு வழியில் முயற்சி செய்தாலும் உடனடியாகப் பலன் கிடைக்கும். உத்தியோக ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்ரன், ராகு ஆகிய நான்கு கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. எனவே மேலதிகாரிகளின் ஆதரவோடு ஒரு சிலருக்கு உயர் பதவிகள் கிடைக்கும்.

நேர்முகத் தேர்விற்கு சென்று இதுவரை தேர்ந்தெடுக்கப்படாமல் திரும்பி வந்தவர்கள், இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு வேலையில் அமரும் வாய்ப்பு உருவாகலாம். 12ஆம் இடத்தில் கேதுவால் பயணங்கள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு நீண்டதூரப் பயணங்களும் அதனால் நிகழ்காலத்தில் வாங்கும் ஊதியத்தைக் காட்டிலும் கூடுதல் ஊதியமும் கிடைக்கலாம்.

சுயஜாதகத்தை ஒருமுறை பரிசீலனை

## கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்!

செய்து பார்த்து விட்டு யோகம் நன்றாக இருந்தால் மாற்றிக் கொள்ளலாம். இல்லையேல் இருக்குமிடத்திலேயே நீடிக்கலாம். இம்மாதம் விநாயகப் பெருமானுக்குரிய சதுர்த்தி திருநாளில் விரதமிருந்து வேழ முகத்தானை வழிபாடு செய்யுங்கள். ஐங்கரனின் அருளால் அனைத்துக் காரியங்களிலும் நன்மை கிடைக்கும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

இக்காலம் உங்களுக்கு ஏற்றம் தரும் காலமாகும். உங்கள் ராசி நாதன் குருவிற்கு, பகைக் கிரகமாக விளங்கும் சுக்ரன் நீச்சம் பெறுவது யோகம்தான். எதிர்பாராத தன லாபம் இல்லம் தேடி வந்து சேரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புகழ்மிக்கவர்களின் ஒத்துழைப்போடு பொன்னான வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். பிள்ளை




கள் வழியில் நல்ல தகவல் வந்து சேரும். பிரியமானவர்களுடன் இருந்த பிணக்குகள் அகலும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரண சேர்க்கை தடையின்றி வந்து சேரும்.

**செயற்பாடுகளில் வெற்றி தரும் செவ்வாய் பெயர்ச்சி!**

செப்டெம்பர் 9ஆம் திகதி செவ்வாய் 10ஆம் இடத்திற்கு வருகின்றார். எனவே முத்தான தொழிலில் முன்னேற்றம் கூடும். முக்கிய பிரமுகர்கள் இல்லம் தேடி வருவர். வெற்றி உங்கள் பக்கம் இருப்பதால் அரசியல் வாதிகள் உங்களைத் தங்கள் பக்கத்தில் ஈர்த்துக் கொள்ள முன்வருவர். செல்வாக்கு உயரும். ஒரு சிலருக்கு அதிகாரப் பதவி கிடைக்கும். 6இல் ராகுவும், கேந்திரத்தில் குருவும் இருக்கும் பொழுது அஷ்டலட்சுமி யோகம் செயற்படும் என்பார்கள். எனவே அஷ்ட லட்சுமியும் உங்கள் இல்லத்தில் அடியெடுத்து வைக்க குருவை வழிபடுவதோடு, குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவதும், ராகு-கேதுக்களை முறையாக வழிபடுவதும் நல்லது. இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப் பெருமானை வழிபட்டு வருவது சிறப்பு தரும். பௌர்ணமி தோறும் கிரிவலம் வருவது நன்மையை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் வளர்ச்சி கூடும் மாதமாகும். குருவின் நேரடிப் பார்வையில் உங்கள் ராசி இருப்பதால் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானம் திருப்தி தரும். வரன்கள் முடிவாகும். தம்பதியர்களுக்குள் ஒற்றுமை பலப்படும். தடைக்கற்கள் படிக்கற்களாக மாறும். பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் உண்டு. உடன் பிறந்தவர்களால் நன்மை கிடைக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் வந்து சேரலாம். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வீடு வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டு யோகம் கூட எண்ணியபடி வந்து சேரலாம். விநாயகர் வழிபாடு வெற்றியை வழங்கும். சர்ப்பக் கிரக வழிபாடு சந்தோசத்தை தரும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**

ஓகஸ்ட்: 17, 18, 23, 24, 28, 29
செப்டெம்பர்: 7, 8, 9, 14, 15

(முற்றும்)

உனது திறமை ஒன்று என்றாலும் அதனை ஒளித்து வைப்பது உன்னையே ஒழிப்பதற்கு சமமாகும் -மில்ட்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மகிந்தவின் சாயம் வெளுத்தால் அது தமிழருக்கு நன்மை என்ற பயமோ?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய கட்சியை ஆரம்பித்தால் அவர் தொடர்பிலான பல இரகசியங்களை வெளிப்படுத்துவேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ குறித்த இரகசியங்களை வெளியிட்டால் அவரின் சாயம் வெளுக்கும் என்றும் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன எச்சரித்திருப்பதுதான் இங்கு நோக்குதற்குரியது.

அதாவது முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் பல இரகசியங்கள் ஜனாதிபதி மைத்திரிக்குத் தெரிந்துள்ளது. இருந்தும் அவர் அதனை வெளியிடாமல் மறைப்புச் செய்து வருகிறார் என்பது அவரின் வாயிலிருந்தே வெளிப்ப ட்டுள்ளது.

உண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பிலான இரகசியங்களை ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிருக்க வேண்டும். எனினும் அதனை அவர் செய்யவில்லை.

சிலவேளை மகிந்த ராஜபக்ஷவின் இரகசியங்களை தேர்தல் காலத்தில் வெளியிட்டால் அது தனக்குப் பேராபத்தைத் தரும் என்ற அடிப்படையில் அந்த நேரத்தில் இரகசியங்களைச் சொல்லாமல் விட்டிருக்கலாம்.

இருந்தும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கையோடாவது மகிந்த ராஜபக்ஷ தொடர்பான இரகசியங்களை வெளியிட்டிருக்க வேண்டும். இதனையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்யவில்லை.

சரி அதனையும் செய்யவில்லை என்றால்; ஜனாதிபதி மைத்திரியின் அரசுக்கு எதிராக பல்வேறு இடைஞ்சல்களை மகிந்த ராஜபக்ஷ தரப்புச் செய்த போதாவது இரகசியங்களை வெளியிட்டிருக்கவேண்டும். இதனையும் ஜனாதிபதி மைத்திரி செய்யவில்லை.

மாறாக இப்போது, புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்கப் போவதாக மகிந்த ராஜபக்ஷ அறிவித்த தன் பின்னர் அதைத் தடுக்கும் நோக்கில்,

"புதிய அரசியல் கட்சியை மகிந்த ஆரம்பித்தால் அவர் தொடர்பான இரகசியங்களை வெளியிட்டு அவரின் சாயத்தை வெளுக்கச் செய்வேன்" என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதானது; மகிந்த ராஜபக்ஷ குறித்து ஜனாதிபதி மைத்திரிக்கு தெரிந்த இரகசியங்கள் தமிழினத்துக்கு எதிராக நடந்த யுத்தம் மற்றும் காணாமல்போனவர்கள் தொடர்புபட்டதாக இருக்கலாம் என்று ஊகிக்கத் தோன்றுகிறது.

ஏனெனில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பான இரகசியங்களை வெளியில் சொல்வதானது தமிழ் மக்களுக்கு சாதகமாகி விடும் என்ற நினைப்பிலேயே ஜனாதிபதி மைத்திரிபால அதனை இன்னமும் மறைப்புச் செய்து வருகிறார் என்று நினைப்பதில் தவறில்லை.

தனது அரசியல் இலாபத்திற்காக மகிந்த ராஜபக்ஷவின் சாயத்தை வெளுக்கச் செய்தால் அவர் மின்சார நாற்காலியில் அமருகின்ற ஆபத்தும் ஏற்படலாம் என்ற அச்சமே இதுவரைக்கும் அந்த இரகசியங்கள் பக்குவமாக வைக்கப்பட்டுள்ளன என்று கூறுவதில் பிழை இருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில் ஜனாதிபதி மைத்திரிக்கு, மகிந்த ராஜபக்ஷ மீதான கோபம் என்பது அரசியல் ரீதியானது மட்டுமே. அதனால்தான் ஜெனிவாவில் வைத்து கோத்தபாய ராஜபக்ஷவை மைத்திரி தரப்பு காப்பாற்றியது.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரி கூறிய இரகசியங்கள் அவருக்கு மட்டுமே தெரிந்ததாகவே தொடர்ந்தும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## வெளிநாட்டு நிபுணர்களை அனுமதிக்க முடியாது!

(கொழும்பு)

காணாமல்போனோர் குறித்து ஆராயும் நிரந்தர அலுவலகமானது மிகவும் பயங்கரமானதாகும்.

இதனூடாக வெளிநாட்டு நிபுணர்கள் இலங்கை வநது விசாரணை நடத்தும் நிலைமை ஏற்படும்.

இதற்கு ஒரு போதும் அனுமதி வழங்க முடியாது என்று கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரும்பாராளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

காணாமல்போனோர் அலுவலகத்தை கூட்டு எதிரணியினர் கடுமையாக விமர்சிக்கின்றமை தொடர்பாக ஊடகங்கள் வினாவியபோதே கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

## 'புதிய கட்சி உருவாகும்'

(கொழும்பு)

புதிய கட்சி ஒன்று விரைவில் உருவாகும். அக்கட்சி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் உருவாகும். அது தொடர்பில் ஜனாதிபதியும் நாளாந்த செய்திதாள்களை வாசித்து அறிந்து கொள்வார். எனவே அது அந்தச் செய்தி வெளியானதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரிடத்தில் உள்ள எம்மை பற்றிய ரகசியங்களை வெளியிடட்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

லுனுகும்வெஹெர பிரதேச செயலாளர் காரியாலயத்தின் கேட்போர்கூடத்தில் புதிய அரசியலமைப்பு மரணப்பொறி என்ற தலைப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

## நல்லூர்க்கந்தனுக்கு



### ஈசனே நல்லூர் வாசனே

இராகம்: கமாஸ் தாளம்:ஆதி

**அனுபல்லவி**

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனைநம்பினேன் வாவா

**சரணங்கள்**

பண்ணினோர் மொழியாள் பாலசுப்பிர மணியா
எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும் வண்ணம்
வாவா

(ஈசனே)

தாசனான யோகசுவாமி சாற்றும் பாவைக்
கேட்டுக்கி ருபை கூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா

சிவத்திரு யோகர்சுவாமிகள்

## பாக்கு சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கு இறக்குமதி தடை விதிக்க அமைச்சரவைப் பத்திரம்

பாக்கு சார்ந்த உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்குமாறுகோரி அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொற்றா நோய்களை கட்டுபடுத்துவதற்கு புகையிலை மற்றும் பாக்கு பாவனையை தடைசெய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பாக்கு சார்ந்த பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு எதிர்காலத்தில் தடை விதிக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-10)

## சட்டவிரோத மணல் அகழ்வு; 4 பேருக்கு 25 ஆயிரம் ரூபாய் தண்டம்

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் அனுமதிப்பத்திரங்களின்றி சட்டவிரோதமாக உழவு இயந்திரங்களில மணல்ஏற்றிய நான்கு பேருக்கு தலா இருபத்தையாயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செயப்பட்டுள்ளது .

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் கடந்த 18-ம் திகதி அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய ஒருவரையும் உழவு இயந்திரம் உட்பட கைதுசெய்து அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இதே போன்று கடந்த சனி, ஞாயிறு இரு நாட்களில் உருத்திரபுரம் பன்னங்கண்டி, பாரதிபுரம் ஆகியபகுதிகளில் அனுமதிப் பத்திரங்கள் இனறி உழவுஇயந் திரங்களில் மணல்ஏற்றிய நான்குபேரைக் கைதுசெய்த கிளிநொச்சிப் பொலிசார் அவர்களுக்கெதிராக வழக்குப்பதிவு செய்து நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதிவான்

எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியதையடுத்து நான்கு பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் ஒருலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல செய்யப்பட்டுள்ளது. (செ-15)

## பட்டப்பகலில் 18 இலட்சம் கொள்ளை

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர், அம்பலாங்கொடை நகரில் வைத்து, பெண்ணொருவரிடமிருந்து 18 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயினைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை நண்பகல், இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனியார் வங்கியொன்றில் வைப்பிலிடப்பட்டிருந்த பணத்தை மீளப்பெற்றுள்ள மேற்படி பெண், அதனை மற்றுமொரு வங்கியில் வைப்பிலிடுவதற்காக எடுத்துச் சென்ற போதே, இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதென பொலிஸார் கூறினர்.

முகத்தை முழுமையாக மறைக்கக்கூடிய வகையில் தலைக்கவசம் அணிந்தவாறு, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே, குறித்த பெண்ணுக்கு கத்தியைக் காட்டி அச்சுறுத்தி, மேற்படி பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உணவும் மருந்தும்



"நீ சீரணிக்கும் அளவிற்குள்ளாக உணவு உட்கொண்டால் உணவை நீ சீரணிக்கிறாய். அதிகமாக உட்கொண்டால உணவு உன்னைச் சீரணிக்கும்".

எனவே, சுத்தமானதும், எளிமையானதும, சத்து நிறைந்ததுமான உணவு வகை அன்றாடம் நமது உடலுக்குத் தேவை. காரம், புளிப்பு, உப்பு, சர்க்கரை இவற்றையும் மிதமாகக் கொள்ளவேண்டும்.

உணவில் அளவும் தரமும், முறையும் தவறினால், நோய்கள் உண்டாகும். அவ்வப்போது தக்கபடி மருந்து எடுத்துக் கொண்டால் சரியாகி விடும் என்று இலேசாக நினைப்பதும் சரியன்று.

மருந்து என்றால் என்ன? மனிதன் ஆற்றும் தவறான செயல்களால் நோய் உண்டாகிறது. அந்நோய்களைச் சமன் செய்ய, ஏற்ற ஆற்றல் உடலிலேயே இயற்கை அமைத்திருக்கிறது. ஒரு சமயம் உடலில் நோய் தீர்க்கும் ஆற்றல் வலுவற்றதாக இருந்தால், அந்த ஆற்றலை ஊக்கி விட ஏற்ற பொருட்களே மருந்து ஆகும். உயிர் ஆற்றலுக்கு உந்து சக்தி என்பது வழக்கு.

அவ்வாறான உந்து ஆற்றலுக்குத் துணையாய் உந்தும் ஆற்றலைத் தான் மருந்து என்று கூறுகிறோம். மருவி வந்த மகளை மருமகள் என்பது போல, மருவி வந்த மகனை மருமகன் என்பது போல, மருவி உந்து ஆற்றலை மருந்து என்று வழங்குகிறோம். மருந்தின் உபயோகம் வேறு வழியின்றி ஒரு குறுகிய காலத்தில் சிறு அளவில் மட்டும் தான் பொருத்தமானது. ஏனெனில் சில மருந்து வகை, ஒரு நோயைக் குணப்படுத்தி வேறொரு நோயை உண்டு பண்ணக் கூடியதே. இதைத் தவிர்க்க இயற்கையான அறிவின் வழி முன் உண்ட உணவு முற்றிலும் செரிமானமான பின்னரே அடுத்த உணவு கொள்ளலாகும்.

**சாந்தன் ஹெட்ரிக் கோல்**

# தேசிய மட்ட சம்பியனாகியது யாழ்.பிராந்திய அணி






இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் 16 வயதிற்குட்பட்ட பிராந்திய அணிகளுக்கிடையில் இவ்வருடம் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்றது யாழ். பிராந்திய உதைபந்தாட்ட அணி.

நேற்று முன்தினம் மாலை களனி உதைபந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அம்பலாங்கொடை பிராந்திய அணியை எதிர்த்து ஆடிய யாழ்.பிராந்திய அணி 4:0 எனும் அடிப்படையில் வெற்றிபெற்று முதல் தடவையாக சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக மூன்று கோல்களை அடித்த யாழ்.பிராந்திய அணியின் அணித்தலைவர் எஸ்.சாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



## கைதடி யங்ஸ்ராரை வீழ்த்தி வீனஸ் அபார வெற்றி

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்றுத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அண்மையில் நடைபெற்றன.

குழு B இற்கான போட்டியில் கைதடி யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயசுழற்சியில்வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி யங்ஸ்ரார் வி.க. நிர்ணயிக்கப்பட்ட பெந்து பரிமாற்ற முடிவில் 4 இலக்குகளை இழந்து 47 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை வீனஸ் வி.க 3.5 பந்துப்பரிமாற்ற நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பருத்தித்துறை வீனஸ் வி.க. சார்பில் துடுப்பாட்டத்தில் 3 பவுண்டரிகளுடன் 17 ஓட்டங்களை பெற்ற நிரோசன் ஆட்ட நாயகனாக தெரிவானார். (கு)

# பிறேம்குமார், துசிகரன் அசத்தல் வடமராட்சி லீக் அபார வெற்றி







இதய பூமி அறக்கட்டளை நிதியத்தின் பங்களிப்புடன் வடமராட்சி லீக் நடத்தும் வடக்கு, கிழக்கு தமிழ் மாகாண முதன்மை லீக் அணிகள் பங்குபற்றும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி முதல் சுற்று ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற் கொழுகழுகுகள் விளையாட்டுக்க ழக மைதா னத்தில் நடைபெற்றது.

இதில் சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் வடமரா ட்சி லீக்கை எதிர்த்து முல்லைத்தீவு லீக் மோதியது. இதில் 8:3 என்ற கோல்கணக்கில் வடமராட்சி லீக் அணி வெற்றி பெற்றது.

வடமராட்சி லீக் அணி சார்பாக பிறேம்குமார், துசிகரன் தலா 3 கோலினையும் விஷ்ணுகாந், நளினிகாந் தலா ஒரு கோலினையும் போட்டனர். முல்லைத்தீவு லீக் சார்பாக பியூஷ்லஸ் , ஜேம்ஸ், பிரசாத் தலா ஒரு கோலினை போட்டனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக வடமராட்சி லீக்கின் பிறேம்குமார் தெரிவானார். வெற்றி பெற்ற அணிக்கு இரண்டாயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது. (கு)

## பாரதி உதைபந்தாட்ட தொடர் காலிறுதியில் பலாலி விண்மீன்

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் பலாலி விண்மீன் விள்ளையாட்டுக்கழகம் காலிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

பொலி கண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சிறி அம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப் போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் 7:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றுள்ளது.அவ் வணி சார்பாக உதயதாஸ் 4 கோலினையும் யூட் கெனடி 2 கோலினையும் அருள்தாஸ் ஒரு கோலினையும் போட்டனர். (கு)

## அரையிறுதியில் பெலிகன்ஸ்

உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரிவு 1 தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் சென். மேரிஸ் மற்றும் பெலிகன்ஸ் அணிகள் மோதின. ஆட்ட நேர முடிவில் பெலிகன்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

பெலிகன்ஸ் முற்பாதியாட்டத்திலே இரு கோல்களையும் பெற்றமை அணிக்கு சாதகமானதுடன் பிற்பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் பலமான ஆட்டத்தினை வெளிப்படுத்திய போது பெலிகன்ஸ் அணியின் வெற்றிக்கு முற்பாதியாட்டம் வித்திட்டது. (கு)

# மெலிஞ்சிமுனை இருதயராஜா வி.க. நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

**நசரத், நீக்கிலார் வெற்றி**





மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் புங்குடுதீவு நசரத், புனித நீக்கிலார் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் 19.08.2016 நடைபெற்ற முதல் போட்டியில் புங்குடுதீவு நசரத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா B அணி மோதியது.

இப்போட்டியில் புங்குடுதீவு நசரத் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நாவாந்துறை புனித நீக்கிலார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக் கழகம் மோதியது.


இதில் நாவாந்துறை புனித நீக்கிலார் விளை யாட்டுக்கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. (கு)

# வாகனத்தை இழுத்துச் சென்ற கேபிளில் மோதியது மோ.சைக்கிள்

## இளைஞர் படுகாயம்

(கோப்பாய்)

பலாலி வீதி உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலயத்துக்கு அண்மையாக இடம் பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.



இச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த பார்த்தீபன் (வயது–29) என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார்.

கற்பக விநாயகர் ஆலயத்துக்கு அண்மையாக உள்ள சிவன் வீதிக்குள் இருந்து பட்டா ரக வாகனம் ஒன்று பழுதடைந்து நின்ற ஹன்டர்ரகவாகனம் ஒன்றை கேபிள் ஒன்றினால் பிணைக்கப்பட்ட நிலையில் இழுத்து வந்துள்ளது.

சிவன் வீதிக்குள் இருந்து பலாலி வீதியில் இழுத்து வந்த பட்டா ரக



வாகனம் வீதியில் ஏறியதும் இழுவையில் வந்த ஹன்டர் ரக வாகனம் இழுவிசை போதாமல் மெதுவாக நகர்ந்துள்ளது.

அவ்வேளையில் பலாலி வீதி வழியாக ஊரெழு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த குறித்த மோட்டார் சைக்கிள் வேகமாக வந்துள்ளது. துரதிர்ஷ்டவசமாக ஹன்ரர் வாகனத்தை இழுந்து வந்த கேபிள் வீதிக்கு குறுக்காக சென்றதனை அவதானிக்காது இரண்டு வாகனத்துக்கும் இடையே மோட்டார் சைக்கிளை செலுத்தியமையால் கேபிளில் மோதுண்டு மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டு கால் முறிவடைந்த நிலையில் படுகாயமடைந்தார். உடனடியாக காயமடைந்த இளைஞர் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி விபத்து வீதியின் நடுவே இடம்பெற்றமையால் விபத் தில் சிக்கிய வாகனங்கள் அகற்றப் படும் வரை அப்பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ–30, 87)

# மிரட்டல்களால்...

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்கட்சியினர் புதிய கட்சியை தொடங்கினால் வீதியில் இறங்க முடியாத நிலையை உருவாக்குவேன் என கடந்த வெள்ளிக்கிழமை மாத்தறையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி எச்சரித்திருந்த நிலையிலேயே மகிந்த நேற்று இவ்வாறு பதிலளித்திருக்கின்றார்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய பரிசோதனை உற்பத்தி உதவி அதிகாரிகளின் சங்கத்தின் 19ஆவது சம்மேளனம் நேற்று திங்கட்கிழமை பத்தரமுல்லையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ, புதிய கட்சி ஆரம்பித்தால் இரகசியங்களை வெளியிடுவேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்தறையில் வைத்து எச்சரிக்கை விடுத்திருந்தமை தொடர்பாக தனது பதிலை தெரிவித்தார்.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்தால் இல்லாத விடயங்களும் உதயமாகும் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், எனது அரசியல் பயணத்தை தடுக்க எவராலும் முடியாது எனவும் சூளுரைத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கட்சிக்குள் இருந்த முக்கிய தலைவர்களை அச்சுறுத்தி ஓரம்கட்டி விட்டு தனது அரசியல் பயணத்தை தொடர முற்பட்டதாலேயே அவர் எவரது ஆதரவு இன்றி இறுதியில் உயிரிழக்கவும் நேரிட்டது. அந்தநிலை தற்போது மைத்திரிபாலவுக்கு ஏற்பட்டு வருகிறது.

அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்தபோது இவ்வாறு அச்சுறுத்தியிருந்தால் என்னவாகியிருக்கும்? டி.எஸ் கூறியிருந்தால் எப்படியிருந்திருக்கும்? கட்சி உருவாகியிருந்திருக்கும்ா? அப்படித்தான் புதிய கட்சி உருவாகும். அதனை எவராலும் தடுத்துநிறுத்த முடியாது.

ஆனால் நான் அப்படி கட்சி ஒன்றை நிதானமின்றி ஆரம்பிக்க மாட்டேன். அதன் அர்த்தம் என்னவென்றால் கட்சி ஆரம்பிப்பதற்கான சுதந்திரமொன்று காணப்பட வேண்டும். தீர்மானம் எடுப்பதற்கான சுதந்திரம் மக்களுக்கு இருக்கவேண்டும். அச்சுறுத்தினால் அதனை எவ்வாறு செய்வது? நன்றாக கூறியிருந்தால் அதில் வித்தியாசம் இல்லை. ஆனால் அச்சுறுத்தல் விடுத்தால் இல்லாத தொன்றும் உருவாகும். அச்சுறுத்தல் மற்றும் சிறைதள்ளுதல் போன்றவற்றினால் மனிதர்களது அரசியல் சிந்தையை இல்லாதொழிக்க முடியாது என்றார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட யுத்தம் குறித்தும் கருத்துத் தெரிவித்த மகிந்த, யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்ததன் மூலம் நாட்டில் தினந்தோறும் இடம்பெறுவந்த உயிரிழப்புக்களையும், நாடு இரண்டாகப் பிளவடைவதையும் நிறுத்தியதாகவும பெருமிதம் வெளியிட்டார்.


இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிராகவும், முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் நாங்கள் யுத்தம் செய்யவில்லை. யுத்தத்தில் ஈடுபட்ட போராளிகளுக்கு எதிராகவே போர் தொடுத்தோம் என்பதுதான் உண்மை. இந்த யுத்தம் 30 வருடங்களாக நடைபெற்றது. இந்தப் போரில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உயிரிழந்த இளைஞர்களின் எண்ணிக்கை என்ன? தினமும் குண்டுகள் வெடித்தன. தினந்தோறும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. அங்கும் உயிரிழந்தார்கள். இங்கும் பலியானார்கள். இந்த உயிரிழப்புக்களை நிறுத்தவே நாங்கள் போராடினோம். தினந்தோறும் மக்கள் உயிரிழப்பதையும், நாடு இரண்டாகப் பிளவடைவதையும் நிறுத்தி ஒன்றாக பணிசெய்வதற்கே போராடினோம். ஒருவேளை நாடு பிளவடைந்திருந்தால் வடக்கிலிருந்தோ அல்லது கிழக்கிலிருந்தோ எவரும் இங்குவர முடியாது. புறம்பான ஒரு நாட்டை ஏற்படுத்துவதிலிருந்து விலக்கி அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே நாட்டில் ஒருதாய் பிள்ளைகளாய் வாழவே நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். யுத்தத்தை நிறுத்தியபடியினால் எமக்கொரு பொறுப்பு ஏற்பட்டது. யுத்தத்தில் ஈடுபட்ட போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தினோம். 12 ஆயிரத்து 500 போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தினோம்.

அப்பகுதிகளில் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தோம். வீதி, குடிநீர்வசதி, மின்சாரம் போன்றவற்றை செய்து கொடுத்தோம். 30 வருடகாலமாக பின்நோக்கிச் சென்றிருந்த வடக்கு பகுதியை முன்நோக்கி நகர்த்தியுள்ளோம்.

ஆனால் நல்லாட்சி எனக்கூறும் அரசாங்கம் எம்மைப்போல் மக்கள் பணிகளில் முன்னேற்றத்தை காண்பிக்காது ராஜபக்ஷ தரப்பை பழிவாங்குவதிலேயே குறியாகவுள்ளது என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (செ–11)

# எஜமானின் உயிரைக்...

8 அடி நீளமான ராஜநாகத்திடமிருந்து எஜமானின் உயிரைக் காப்பாற்றவதற்காக நாயொன்று தன் உயிரை மாய்த்துக் கொண்ட நெஞ்சை நெகிழவைக்கும் சம்பவமொன்று நேற்று யாழ்.கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்றுள்ளது.



மேற்படிச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் விளையாட்டரங்க ஒழுங்கை ஜி.பி.எஸ் வீதி, கல்வியங்காடுஎனும்பகுதியில்உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி வீட்டில் வசிக்கும் செல்வரட்ணம் பிரசாந்த் என்பவர் அல்சேசன் நாய் ஒன்றை செல்லமாக வளர்த்து வந்துள்ளார்.

பிரஸ்தாப நாய் தினந்தோறும் அவருடனே அருகிலிருந்து சாப்பிடுவதும் உறங்குவதையும் வளக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிலையில் நேற்று குறித்த வீட்டின் பின் வளவுக்குள் ராஜநாகம் ஒன்று பிரவேசித்துள்ளது.

நாகம் வந்திருப்பதனை அவதானித்த நாய், எஜமான் முன் குரைத்து அவரைவிழிப்படையச்செய்துள்ளது.

நாயின் அடையாளப்படுத்தலுடன் வீட்டின் பின்பகுதிக்குள் சென்றபோது அங்கு மூலையில் ஏதோவொன்று மறைந்துள்ளதை அவதானித்த நபர் அது என்னவென கண்டறிய தடியை அங்கு நீட்டியுள்ளார்.

இதன்போது வெகுண்டெழுந்த சுமார் 8 அடி நீளமான ராஜநாகம் அவரை கொத்த முயன்றுள்ளது.

உடனே விரைந்து செயற்பட்ட நாய் ராஜநாகத்தை தன்வாயால் இறுக கௌவியபடி அவ்விடத்தை விட்டு விரைவாக சென்று எஜமானின் உயிரைக் காப்பாற்றியுள்ளது.

நாயுக்கும் ராஜநாகத்துக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் நாகத்தின் விஷப்பல் தாக்கி காலில் காயமடைந்த நாய் உடனடியாக சிகிச்சைக்காக மிருக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு 8 மணியளவில் நாய் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

நாயுடனான மோதலில் பலவீனமடைந்த ராஜநாகமானது அயலவர்களின் உதவியுடன் வீட்டு உரிமையாளரால் பிடிக்கப்பட்டு இரும்புக்கூட்டில் அடைக்கப்பட்டது.

இதேவேளை எஜமானின் உயிரைக் காப்பாற்றிய நாயுக்கு மரியாதை செய்வதற்காக நாயின் இறுதிச் சடங்கானது இன்றைய தினம் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

மேலும் பிடிபட்ட ராஜநாகத்தையும் உயிரிழந்த அல்சேசன் நாயையும் அப்பகுதி மக்கள் பலர் சென்று பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ–11)

# தமிழ் – முஸ்லிம் மாணவர்கள் மீது...

பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் மீது சிங்கள மாணவர்கள் தாக்குதல் நடத்தியதில் 12 மாணவர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் இரு மாணவர்களுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

பேராதனை பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞான பீட முதலாம் வருட தமிழ் மாணவர்கள் நேற்று மாலை குறிஞ்சிக்குமரன் ஆலய வழிபாடுகளை முடித்துக் கொண்டு தமது விடுதிக்கு திரும்பிச் செல்லும் வேளையில், அவர்கள் சென்ற பாதையை வழிமறித்த 2ஆம் வருட சிங்கள மாணவர்கள் பொலலுகள் மற்றும் தலைக் கவசங்களினால் தமிழ் - முஸ்லிம் மாணவர்களை கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் காயமுற்ற மாணவர்கள் உடனடியாக இரவு 7 மணியளவில் சக மாணவ, மாணவிகளின் உதவியுடன் கண்டி பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அனுமதிக்கப்பட்டுள்ள 12 மாணவர்களில் 2 மாணவர்களுக்கு பலத்த இரத்த காயங்கள் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட பல்கலைக்கழக நிர்வாகம் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக இருதரப்பு மாணவர்களுடனும் பேச்சவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக அறியமுடிகிறது. (செ–312)

# கொழும்பு துறைமுக திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும்

## அரசிடம் ஜே.வி.பி வலியுறுத்து

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டு மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தினை மைத்திரி - ரணில் இணைந்த தேசிய அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஜே.வி.பி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் அன்று ஆரம்பிக்கப்பட்டபோது அதன் விளைவுகளை சுட்டிக்காட்டியிருந்தும் அதனை அரசாங்கம் கண்டுகொள்ளாதபடியினால் பெருமபாதிப்பு ஏற்பட்டதாக தெரிவித்த ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, போர்ட் சிற்றி விவகாரத்தில் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றாமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குத்துக்கரணம் அடித்திருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

ஜே.வி.பியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை பகல் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அநுர குமார திஸாநாயக்க,

போர்ட் சிற்றி திட்டத்தின் ஊடாக இலங்கையின் வருங்கால தலைமுறையை அரசாங்கம் பலிகடாவாக்கியிருப்பதாக சாடினார். (செ–11)

# புதிய அமைப்பாளர்...

யாப்பா அபேவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளராக இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுபபினர் டலஸ் அழகப்பெரும தான் பதவி விலகுவதாக கடந்த 19ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, அந்த வெற்றிடத்துக்கு லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை சுதந்திரக் கட்சியின் ஹோமாகம அமைப்பாளராக இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பதவி விலகியிருந்தார்.

இந்நிலையில், அந்த வெற்றிடத்துக்கு மேல் மாகாண சபை அமைச்சர் காமினி திலகசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதம் நேற்றுக் காலை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (செ–11)

# வடக்கு பொருளாதாரத்தின்...

தின் தொடக்க அமர்வு நேற்றைய தினம் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

உலக நாடுகளின் பொருளாதாரங்களுக்கு மத்தியில் இலங்கையினுடைய பொருளாதாரத்தில் மிக முக்கியமான சவாலாக சமூக அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் இடையில் இடைவெளியை காணப்படுகிறது. அதற்கிடையில் சமநிலையை பேண வேண்டும்.

அதாவது நல்ல சமூக குறிகாட்டிகளை இலங்கை சமூகம் கொண்டிருக்கின்ற போதிலும் இளைஞர்களுடைய எதிர்பார்ப்புக்கும் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களுக்கிடையில ஒரு தொடர்பின்மை நிலவுகின்றது.

நாம் தாழ்நிலை வருமான மட்ட நாடாக இருந்து தற்போது நடுநிலை வருமான மட்ட நாடாக மாறி வருகின்ற சூழ்நிலையில் உள்ளோம். மீண்டுவரும் செலவீனத்துக்கு கடன்படுகின்ற பாதகமான நிலையில் இருந்து மாற்றம் காண வேண்டிய நிலையில் இலங்கையின் பொருளாதாரம் உள்ளது.

சவால்களில் மிக முக்கியமாக எமக்கிருப்பது சனத்தொகையின் கட்டமைப்பின் பண்பாட்டையும் அதனுடைய முறைமைகளையும் மாற்றி அமைக்க வேண்டிய தேவை பொருளாதார மறு சீரமைப்பபுக்கு முன்பாக இடம்பெற வேண்டும். அபிவிருத்தியின் முன் தேவையாக தொழில்நுட்ப நிபுணத்துவ நிலைக்கு மனித வளம் மாற்றப்பட வேண்டும்.

கடன்பட்டு உட்கட்டுமானங்களை கட்டியமைத்தல் என்பது ஒரு சவாலான விடயம். ஏனெனில் கட்டியமைக்கின்ற உட்கட்டுமானம் அந்த கடனை அடைக்கக் கூடிய வகையில் உற்பத்திதுறைக்கு உடனடியாக பங்களித்து விடாது. நீண்டகால செயற்பாடாக அமையும் எனவே அதுவும் ஒரு சவாலாக உள்ளது.

பொருளாதார ரீதியில் எமது தெரிவுகளாக தனியார் துறை மூலம் ஊக்குவிக்கப்படும் முதலீடுகள் துரிதப்படுத்தப்படுவது ஒரு தெரிவாக இருக்கும்.

சில நாடுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் 90 வீதம் ஏற்றுமதி மூலமாக வருமானம் கிடைக்கிறது. ஆனால் இலங்கையில்மொத்த தேசிய உற்பத்தியில் 17 வீதமானது ஏற்றுமதி நடவடிக்கையாக உள்ளது.

கடன் வழி சுமையை தவிர்க்க நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அவசியம் ஆகும். உள்ளூர்த்துறைகளை வளர்த்தல் அவற்றை ஊக்கு வித்தல் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவற்றை அதிகரித்தல் உடனடி தீர்வுகளாக அமையும்

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சுதந்திர வர்த்தக உடன்பாடுகள் எமது நாட்டினுடைய சேவைத்துறை தொழில்நுட்பத்துறை முதலீட்டு துறை ஆகியவற்றை மேலும் வளர்க்க உதவும். இந்தியா, சீனா, யப்பான் போன்ற நாடுகள் இலங்கையின் முக்கிய நகரங்களிலே முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளன.

வடமாகாண பொருளாதாரத்தின் சவால்களை பொறுத்தவரையில் மிக முக்கியமாக தேசிய நல்லிணக்கத்தில் மிக முக்கிய பகுதியாக ஒன்றிணைக்கப்பட்ட இந்த நாட்டில் வடமாகாணத்தின் பொருளாதாரம் மீட்டெடுக்கப்பட வேண்டும்.

முக்கியமாக வடமாகாணத்தின பொருளாதாரம் அரசினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற பௌதிக சமூக உட்கட்டுமானங்களுக்குகூடாக தனியார் துறையினுடைய முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலமாக வடமாகாணத்தின் முதலீடு சூழலை வளப்படுத்த முடியும்.

அந்த முதலீட்டு சூழல் வட மாகாணத்தினுடைய விசேட தேவைகளுக்கும் வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அதற்கேற்ற கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

வடமாகாணத்தின் மீன்பிடித்துறை, விவசாயத்துறை, வர்த்தகத்துறை வளர்ச்சி கண்டு வருவது இதற்கான நல்ல அறிகுறியாக உள்ளது.

தேசிய விநியோக கட்டமைப்பில் ஒரு பகுதியாக வடமாகாணம் மாறி வருகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

அதற்கான விநியோக ஒழுங்குமுறைக்குள் வடமாகாணம் வந்துள்ளது. முதலீடுகளையும் மூலதனங்களையும் உருவாக்குபவர்கள் வடமாகாணத்தை நோக்கி நகர்வதாக அறிகுறிகள் தென்படுகின்றன.

புதிய தொழில்துறையாக உல்லாசபிரயாண துறை திட்டங்கள் வகுக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் சந்தர்ப்பங்கள் உள்ளன. வவுனியா கிளிநொச்சியில் ஆடை உற்பத்தி தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதைவிட முதலீட்டு துறைக்கு மிக முக்கியமான தொலைத் தொடர்பு துறை அதிகரித்து வருகிறது. ஆனால் வங்கிமயப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம் பற்றாக்குறையாகவுள்ளது.

அத்துடன் கைத்தொழில் வலயங்களை அபிவிருத்தி முகாமைத்துவம் செய்வதற்கு தனியார் துறையின் பங்களிப்பு அவசியம் ஆகும்.

சராசரி தேசிய வளர்ச்சி 7 வீதமாக இருக்கும் போது வடமாகாணத்தின் நியம வளர்ச்சி என்பது 2015 ஆம் ஆண்டிலே 12.1 வீதமாக இருந்தது. இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் வடமாகாணம் 3.5 வீதத்தை பங்களிப்பு செய்கிறது.

மேலும். வடமாகாணம் தென்னிந்திய மாநிலங்களுடன் முதலீட்டு தொடர்புகளை அதிகரிக்கும் வாய்ப்புக்களை கொண்டு அமைந்துள்ளது. அவற்றை செயற்படுத்தினால் பொருளாதார வளர்சிக்கு உதவி கரமானதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9).


## காணி தேவை

யாழ். நாவலர் வீதி மற்றும் அதற்கு அண்மித்த பகுதிகளில் சுமார் 10 பரப்பளவு காணி தேவை.

உடன் தொடர்பு:- 0769078558

(5697)

## வேலைவாய்ப்பு

யாழ். கச்சேரியடியில் உள்ள அச்சகத்திற்கு முகாமையாளர் பணியாளர் தேவை. (பெண்கள்)
சம்பளம் 12,500/-
(யாழ். நகருக்கு கிட்டியவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்பு:-
0775040714

(5701)

## V2 TRAVELS

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226240

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- வல்வெட்டித்துறை

(C-5117)

## வீடு வளவு விற்பனைக்குண்டு

மீசாலை வடக்கு, வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன், உடன் குடியேறக்கூடிய நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு வீடு வளவு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- நவம் 0776474639
தவம் 0775977210

(C-5518)

## FALC FRENCH LANGUAGE CENTRE "FOR THE BEST FRENCH FOREVER"

## FRENCH CLASSES

பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

விரிவுரையாளர் : MR. V. J. (Trained in France - 2007)

DELF A1, A2, B1 Exam இல் 100 % சித்தியடையலாம்.

இதுவரை 1125 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03. 09. 16 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09.16 Mon@ 3.30 pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

(C-5565)


## தனியார் பேருந்து...

இந்த விபத்து சம்பவம் நேற்று முற் பகல் பூநகரியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பூநகரி ஆதார வைத்தியசாலையிலும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மடுத்தலத்திலிருந்து முழங்காவில் ஊடாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த தனியார் பயணிகள் பேருந்து, பூநகரி மண்டைக்கள்ளாறு நாளாவெளி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்த காரணத்தினாலேயே மேற்படி விபத்து சம்பவித்துள்ளது.

இதில் யாழ்ப்பாணம் இளவாலையைச் சேர்ந்த புகனேஸ்வரன் அன்னரட்ணம் (வயது 66) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த வீதியூடாக தனியார்பஸ் மிக வேகமாக பயணித்துக் கொண்டு இருந்ததாகவும், இதன்போது பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் ஓரமாக சென்ற போது, வீதியின் எல்லையைக் கடந்து பேருந்து சென்று விடாமல் தடுப்பதற்கு முயன்ற சாரதி வேகத்தை திடீரென கட்டுப்படுத்தியுள்ளார்.

இதனால் அதிகரித்த வேகத்தில் வந்த பேருந்து சடுதியான வேகக்கட்டுப்பாட்டினால் வீதியின் ஓரத்தில் தடம் புரண்டுள்ளது. பேருந்து தலைகீழாக மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதில் இருபத்தி நான்கு பேர் வரையில் காயமடைந்துள்ளதுடன் பிரஸ்தாப பெண்ணும் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்கள் அனைவரும் பேருந்தின் உள்ளே காணப்பட்டதனால் அனைவரும் பேருந்தின் ஜன்னல் வழியாகவும், கதவு வழியாகவும் வீதியில் சென்றவர்களின் உதவியுடன் இழுத்து வெளியேற்றப்பட்டனர். விபத்தில் காயமடைந்த அனைவரும் பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, படுகாயங்களுக்கு உள்ளானவர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த பேருந்தை செலுத்தி வந்த சாரதி தூங்கியதனாலும் விபத்து சம்பவித்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிகதும் பூநகரி பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4,9,15,312)

## முதலீட்டாளர் சம்மேளனம்...

தினம் யாழ் மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

வடக்கில் ஒரு நீடித்த அபிவிருத்தி சூழல் ஒன்றை உருவாக்குவதை நோக்கமாக கொண்டே முதலீட்டாளர் சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது.

பல உள்கட்டுமான வளர்ச்சிகள் கடந்த அரசினால் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் அந்த உட்கட்டுமான வசதிகளை பயன்படுத்தி அபிவிருத்தி முதலீடு உற்பத்தி துறைகளை மேலும் வளர்த்து செல்வதற்கான தேவை எமக்குள்ளது.

வேலைவாய்ப்புக்களை வழங்கும் தேவையை நிறைவு செய்யாவிட்டால். வெறுமனே உட்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்து சுமந்து கொள்வது திறைசேரிக்கு பாரிய நெருக்கடியாக இருக்கும்.

அத்துடன் உட்டகட்டுமானங்களையும் முதலீடுகளையும் பயன்படுத்தி வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதும் வடக்குக்கான வாழ்வாதாரங்களை உருவாக்குவதும் அவசியம் ஆகும். அந்த இலக்கை அடைவதே இந்த சம்மேளனத்தின நோக்கம் ஆகும்.

மேலும் முதலீட்டாளர் சம்மேளனத்துடன் தொடர்புகொள்ளவும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள யாழ் மாவட்டச்செயலகத்தில் தகவல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் எப்போதும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

வடமாகாணத்தில் தனியார் அரச துறைகள் இணைந்து மேற்கொள்ள வேண்டிய முதலீட்டு துறைக்கான சூழலை உருவாக்கத்தக்க சமூக அரசியல் விருப்பத்தை கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் எமக்குள்ளது.

மேலும் நடந்து முடிந்த போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் முன்னாள் போராளிகளுக்கு தொழில்வாய்ப்புக்களையும் வாழ்வாதார சூழலையும் ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை இந்த முதலீட்டாளர் சம்மேளனம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என வடக்கு ஆளுநர் அவர மேலும் தெரிவித்தார். (செ-9)

## நாமல் ராஜ...

பினருமான நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மூவர் பிணையில் விடுவிககப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதான நீதவான் நதிமன்ற மேலதிக நீதிபதி நிசாந்த பீரிஸ் முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை, முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மூவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஹலோ கோப் நிறுவனத்திடம் இருந்து கவர்ஸ் கோப்பரேஷன் நிறுவனம் 125 மில்லியன் ரூபாய் பெறுமதியான பங்குகளை வாங்கியமை தொடர்பில் கடந்த வாரம் பொலிஸ் நிதி குற்ற விசாரணை பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் நாமல் ராஜபக்ஷவிற்கு சொந்தமான கவர்ஸ் கோப்பரேஷன் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக இருந்த அவரது சிநேகிதி உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில்நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மூவரையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் தலா 100 இலட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

அத்துடன் இந்த வழக்கில் சாட்சியம் வழங்கியோருக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது எனவும் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்த நீதிபதி, ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் இறுதி ஞாயிற்றுகிழமைகளில் பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாக வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். (செ-11)


## உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள் பொதிகள் சேவை

- 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
- மிகக்குறைந்த கட்டணம்
- அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள், கருவாடு, பழவகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள் என்பவற்றை அனுப்பிடலாம் (நிபந்தனைக்குட்பட்டது)
- 11kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgக்கான கட்டணம்

UK-550/=, Germany 650/=, France 700/=, Swiss 800/=, Australia 900/=

## திருமுருகன் கொம் நெற்

271A, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7835

கிளைகள்:
46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
18, பிரதான வீதி நெல்லியடி.
பிரதான வீதி பருத்தித்துறை. பிரதான வீதி சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)

(C-5700)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.